Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



திருமண மண்டபம்
திருமண மண்டப அலங்காரம்
மணப்பெண் அலங்காரம்
திருமண கார் சேவை
Honey moon room
Tilko Jaffna City Hotel
021 222 5969
(C/1460)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை (20.05.2012) பக்கங்கள் 20 ஓசை – 232

அழிவின் விழிம்பில்



15

வன்னி விவசாயிகள் அவதி



05




ஈரான் மீது போர்

17

படுகுழிக்குள் தள்ளிவிடும் அரசியல்

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

08

பசுமையான பாடசாலைச் சூழல்



03

# பரிந்துரை நடைமுறைக்கு அழுத்தங்கள் காரணமல்ல

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை எவருக்கும் பயந்து நாம் நடைமுறைப்படுத்தவுமில்லை தட்டிக் கழிக்கவுமில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். யுத்த வெற்றி தின மூன்றாவது ஆண்டு நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இனங்களுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்தி ஐக்கியத்தை பேணும் ஒரு முயற்சியாகவே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை நாம் நியமித்தோம். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் சிலவற்றை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். அவற்றை நடைமுறைப்படுத்துவற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அப்பரிந்துரைகளை தட்டிக்கழிக்க நாம் ஒரு போதும் நினைக்கவில்லை.

20 வருட கால யுத்தத்தை வேறு வழிகளில் நடத்த முயற்சிக்கின்றனர். அதன ஒரு வெளிப்பாடே வடக்கிலிருந்து இர்ாணுவ முகாம்களை அகற்றுமாறு கோருகின்றனர். சமாதானத்தை தொடர்ந்தும் பாதுகாக்க இந்த முகாம்கள் அவசியமென்பதை நான் வலியுறுத்துகிறேன். அச்சுறுத்தல்கள் நீடிக்கும்வரை இராணுவ முகாம்களும் இருக்கும். வடக்கில் இராணுவ முகாம்களை

(19) ஆம் பக்கம் பார்க்க

### ஏழாலைப் பகுதியில் யுவதியைக் காணவில்லை

(ஏழாலை)

ஏழாலைத் தெற்கு மயிலணிப் பகுதியைச் சேர்ந்த இளம பெண் ஒருவரைக் கடந்த மாதம் 29ஆம் திகதி முதல் காணவில்லை என தயார் சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு

(19) ஆம் பக்கம் பார்க்க

### வலுவிழந்த பெண் மீது பாலியல் பலாத்காரம்

(காரைநகர்)

கரைநகர் வெடியரசன் வீதியில் தன்னுடைய வயதுபோன தாயாருடன் வசித்து வந்த வலுவிழந்த பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்தவற்கு முயற்சித்த இருவர் பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டனர்.

நேற்றுப் பகல்வேளை ஓட்டோ ஒன்றில் குறித்த வீட்டிற்கு இரும்புகள் சேகரிக்கச் சென்ற இருவரே தனித்திருந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

# செயற்திட்ட ஆவணத்தை கையளிக்கவில்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ர்னிடம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசின் செயற்திட்டங்கள் அடங்கிய எந்தவொரு ஆவணத்தையும் தாம் கையளிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் அமெரிக்கப் பயணத்தின் முடிவில் நேற்று முன்தினம்மாலை வொஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச்

(19) ஆம் பக்கம் பார்க்க

# பரிந்துரைகளின் நடைமுறை அறிக்கை சமர்ப்பித்தார் பீரிஸ்

## அமெரிக்கா தெரிவிப்பு



(வொஷிங்ரன்)

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளிண்டனுடனான சந்திப்பின்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான செயற்திட்டம் மற்றும் அதனை பகிரங்கப்படுத்துவது குறித்த திட்டங்கள் அடங்கிய அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கையளித்துள்ளதாக இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சர் பீரிஸ் இடையில் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கம் அளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது மட்டுமன்றி, உண்மையான வெளிப்படைத் தன்மையுடன் கூடிய பொதுவான செயற்பாடு அவசியம் என இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்.

அத்துடன். பொறுப்புக்கூறல் மற்றும் இனங்களுக்கு இடையில

(19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக ஏற்க முடியாது

## தேர்தல்கள் செயலகம் அறிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக ஏற்றுக்கொள்ள முடியாது என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏற்றுக் கொள்ளுமாறு விடுக்கப்பட்ட விண்ணப்பத்தை தேர்தல்கள் செயலகம் நிராகரித்துள்ளது.

கட்சிப் பதிவு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் கட்சிப் பதிவினை ஏற்றுக் கொள்ள முடியாது என தேர்தலகள் செயலகம் தெரிவித்துள்ளது.

கட்சிப் பதிவு தொடர்பில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# தமிழருடன் நல்லிணக்கம் ஏற்பட கைதிகளை விடுவியுங்கள்

## சித்தார்த்தன் கோரிக்கை



(கொழும்பு)

சிங்கள மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் அரசாங்கம் ஏன் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்து தமிழ் மக்களுடனான நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள முயலவில்லை என புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கேள்வியெழுப்பியுள்ளார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தி வந்தோம். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம்.

தேசிய

(19) ஆம் பக்கம் பார்க்க

# பல்கலை மாணவன் மீது தாக்குதல் விசாரணை நடத்த குழு நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் நேற்று முன்தினம் காலை கலட்டிச் சந்தியில் வைத்து இனந்தெரியாதவர்களின் தாக்கு தலுக்குள்ளாகிய சம்பவம் குறித்து விசாரணை நடத்த யாழ் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் குணசேகர தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.


யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.ஈ.எல். பெரேராவினால் இக்குழுவினர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் பிரதி சனிக்கிழமைகளில் நடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு யாழ்.பிரதிப்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நாகர்கோவில் மகாவித்தியாலய புனரமைப்பிற்கு உதவுங்கள்

## புலம்பெயர் சமூகத்திடம் கோரிக்கை



(நாகர்கோவில்)

யுத்த சூனியப் பகுதிக்குள் அகப்பட்டு அடையாளத்தை தொலைத்து நிற்கும் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தை மீளக் கட்டியெழுப்ப எமது கிராமத்தைச் சேர்ந்த புலம்பெயர் மக்கள் உதவ முன்வரவேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜயாத்துரை சிறியிரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டகையில் அதிபர் நாகப்பர் கண்ணதாசன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர்கோவில் கிராமம் உருக்குலைந்த நிலையில் காணப்படுகிறது.

நாகர்கோவில் மகா வித்தியாலயம் யுத்தத்தால் முற்றாக அழிவடைந்துள்ளது. இப்பாடசாலையில் கல்விகற்ற பல பழைய மாணவர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் வசித்து வருகின்றார்கள். கடந்த காலத்தில் புலம்பெயர் மக்கள் தெரிந்தோ தெரியாமலோ அல்லது அறிந்தோ அறியாமலோ ஆயுத வன்முறைக்கு வழங்கிய நிதிகளால் எமது கிராமங்கள் சிதைவடைந்துள்ளன. இன்று அதனை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு உள்ளது. எனவே எமது கிராமத்தைச் சேர்ந்த புலம்பெயர் மக்கள் தமது உழைப்பின் ஒரு சிறு உதவியை தாராளமனதுடன் தந்துதவினால் இப்பாடசாலையின் ஒரு வகுப்பறையைக் கட்டி முடிக்கலாம்.

நாகர்கோவில் மகா வித்தியாலயத்திற்கென சேவாலங்கா நிறுவனத்தின் ஊடாக 80 அடி நீளமுள்ள பாடசாலைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. மேலும் 120 அடி நீளமுள்ள ஒரு கட்டடம அமைப்பதற்கான முயற்சிகளை எடுத்துள்ளோம். அத்துடன் இக் கிராமத்திற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கடை அமைப்பதற்குமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மீளக்குடியமர்ந்த மக்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்ப்பதன் ஊடாக அரசிடமிருந்து கல்வி வளங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையாவும் கலந்துகொண்டார்.

# தெய்வீக கானம் இறுவட்டு வெளியீடு

(யாழ்.நிருபர்)


யாழ். இலக்கிய வட்டமும் யாழ். இலக்கியக்குவியமும் இணைந்து நடத்தும் கவிவேந்தர் பொன். சுகந்தனின் "தெய்வீக கானம்" இறுவட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாணிக்கராச சர்மா அனந்தலஷ்மி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர். மு.திரு ஞானசம்பந்தபிள்ளை சிறப்பு விருந்தினராகவும், யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரன், சமூகத்தொண்டர் த.சிவானந்தராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்கின்றனர். (10)

# மண்டைதீவு சுடலை வீதி புனரமைப்பு விரைவில்

நெல்சிப் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்டைதீவு சுடலை வீதி (1.4 கிலோமீற்றர் தூரம்) புனரமைக்கப்படவுள்ளது. இவ்வீதி சேதமடைந்துள்ள நிலையில் போக்குவரத்துக்கள் சிரமத்தின் மத்தியில் இடம்பெற்று வருவதால் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது. (85)





யாழ்ப்பாணம் வில்லூண்டி விநாயகர் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற தேர் உற்சவத்தின் போது தேர் தெருவீதி உலா வருவதையும், அடியார்கள் பிரதட்டை செய்வதையும் காணலாம். (137)

DAMRO



TECHNICIANS

JAFFNA , VAVUNIYA

With recent expansions, we seek to recruit suitable males below 30 years of age to be appointed as Technicians.

APPLICANTS SHOULD :

- be permanent residents within 25km from the above areas.
- have G.C.E. O/L qualification.
- have completed an electronic certificate course from a recognized technical institute.

Experience will be an advantage.

Total earnings will not be less than Rs. 25,000/= p.m.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non - related referees to reach us within ten days of this advertisement.

The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road, Nittambuwa.
E-mail: hrm@damro.lk

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்.நிருபர்)

காரைநகர் வலந்தலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலைவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு மேற்படி வித்தியாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.நேர்த்திரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். அண்மையில் மீளத்திறக்கப்பட்ட இப்பாடசாலையில் இருபது வருடங்களின் பின் முதல் தடவையாக விளையாட்டுப் போட்டி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (10)

# பொலிஸாரின் நடமாடும் சேவை மாதாந்தம் ஒரு பிரதேசத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் பிரிவுகள் தோறும் மாதத்தில் ஒரு தடவை பொலிஸார் நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருவதாக யாழ். பிரதிப் பொலிஸமா அதிபர் கே.ஈ.எல்.பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் இத்தகைய பொலிஸ் நடமாடும் சேவை ஒன்று மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் பிரிவுகள் தோறும் நடத்தப்படும் இந்த நடமாடும் சேவையின்போது பொலிஸ் நிலையங்களில் குற்றச் செயல்கள் குறித்து முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டு நீண்ட நாட்கள் விசாரணை நடைபெறாது இருக்கும் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் தொலைந்த வாகன அனுமதிப்பத்திரத்திற்கான பதிவுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் பொதுமக்களுக்கான குருதி மற்றும் மருத்துவப் பரிசோதனையும் இதன்போது மேற்கொள்ளப்படுகிறது எனவும் யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டார். எனவே அந்தப் பகுதி பொதுமக்கள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றி பயன்பெற முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் முற்பகல் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரது காரியாலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்த தகவலைத் தெரிவித்தார். (பா)

# வடிகால் புனரமைப்பு

(குருநகர்)

யாழ். பிரதான வீதியில் வடிகால்கள் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் போக்குவரத்தில் பாரிய வாகனங்களுக்கு மிகுந்த சிரமங்களாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நெருக்கடி ஒரேநேரத்தில் வீதியில் இருமருங்குகளிலும் புதிதாகப் பள்ளங்கள் தோண்டி கொங்கிறீற் அணைகள் போடுவதால் ஏற்பட்டுள்ளது. (68)

பெண்களை ஆண்கள் காவல் புரிவதால் பெண்மை தாழ்ந்ததன்று. வன்மை இரும்புப்பெட்டி மென்மை தங்கத்தை காப்பாற்றுகிறது. தங்கம் தாழ்ந்ததென உலகம் கருதுகிறதா?

- வாரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## எல்லோரும் தலைவர்களாவதில்லை!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேசுவதற்கு ஒரு நிபந்தனையாக வடக்கில் இருந்து படைகள் அகற்றப்பட வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறது. "படைகளை விலக்காமல் பேச்சுக்கு வரமாட்டோம்" என்று சொல்லி மக்களிடம் உணர்ச்சியைப் பொங்கவைப்பதே அல்லாமல், வழக்கம் போல நடைமுறைச் சாத்தியங்கள் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை.

போர்ச் சூழலின் பின்னான இராணுவ அமைப்பிலிருந்து இயல்பாகவே மக்களின் கைக்கு அதிகாரம் மாறும் நிகழ்வு, விருப்பத்திற்கு உடனே வலிந்து உருவாக்கிவிடக் கூடியதல்ல. பழுத்த பழம் மரத்திலிருந்து தானாக உதிர்வது போன்று அது அமைய வேண்டும். அதற்குரிய காலத்தை நாம் அனுமதிக்க வேண்டும்.

சமூகம் வன்முறையின்மைக்குப் பழகுவதும், பயங்கரவாதம் இனி தலைதூக்காது என்று அரசு நம்புவதும், அதன்பிறகு இராணுவ அதிகாரத்திற்குப் பதில் சிவில் அதிகாரம் முதன்மை பெறுவதும் ஒரு நீண்ட திட்டத்தில் படிப்படியாக நிகழ்ந்தேற வேண்டியதே.

மனித வரலாற்றில், மிகப் பழமையான நிர்வாகம் இராணுவ நிர்வாகம்தான். நூறு ஆண்டுகளுக்கு முன்புவரைகூட, உலகின் மிகப் பெரும் நிறுவனங்கள், அரசுகளின் படைகளே. நாட்டிற்காக உயிரை விடவும், வெற்றி பெற்றால், கொஞ்சம் கொள்ளையடித்துக் கொள்ளவும் அனுமதி பெற்ற தனி நபர்கள் அடங்கிய மாபெரும் குழு. பெரும்பாலும், உடல் பலத்தாலும், அரச பக்தி அல்லது தேச பக்தியாலும் நிர்வகிக்கப்பட்டு வந்த ஒன்று.

அக்காலகட்டத்தில் எழுதப்பட்ட பல நூல்களும், போர்த் தந்திரங்கள், நாட்டை நிர்வகிப்பது போன்றவையே. Sun Tzu வின் போர்க்கலை, வள்ளுவரின் திருக்குறள், சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம், மாக்கியாவில்லியின் இளவரசன், அடம் ஸ்மித்தின் "wealth of Nations" போன்றவை படையினர் மூலம் நாட்டை நிர்வகிப்பது பற்றியே பேசியிருக்கின்றன.

முதலாம் உலகப் போர் காலத்திலேயே, நிர்வாகக் கோட்பாடுகள் மெல்ல மெல்ல வலுப்பெற்றது. ஒவ்வொரு வேலையையும் சிறு சிறு பாகங்களாகப் பிரித்து, அதற்குத் தேவையான நேரம், உழைப்பு முதலியவை கணிக்கப்பட்டு, வேலையை மேலாண்மை செய்யும் ஒரு நோக்கு தொடங்கியது. இவற்றை சாதாரண பொதுமக்களிலிருந்து அவர்களால் தெரிவு செய்யப்பட்டு வருவோரே செய்யும் நிலை படிப்படியாக உருவாகியது.

நிர்வாகிகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். தன் எல்லையை உணர்ந்து அதற்குள் தம் உழைப்பைச் செலுத்தி, இலக்குகளை எட்டுபவர் ஒரு வகை. இவர்கள் மற்றவர்களையும் கணக்கிலெடுத்து நிரந்தர இலக்கு நோக்கிச் செல்ல முடியாதவர்கள் அல்லது விரும்பாதவர்கள்.

இன்னொருவகை, தன் பிரிவு தாண்டி, தன் நிறுவனத்தின் குறுகிய இலக்கைத் தாண்டி, நிறுவனம் இயங்கும் சூழலையும் வெளிசக்திகளையும் அறிந்து கொண்டு, நிறுவனத்தின் நீண்டதூர இலக்கை நோக்கி, அவற்றை வழி நடத்தும் திறன் கொண்ட நிர்வாகிகள். இவர்கள்தான் தலைவர்கள்!

தம் தரப்பை மட்டுமல்லாது, எதிர்த்தரப்புகளின் எண்ணங்களையும் அவர்களுக்கும் இருக்கக் கூடிய சிக்கல்களையும் யதார்த்தத்தையும் ஒரு மனமுதிர்வுடன் எதிர்கொண்டு தாம் சாந்தோருக்கும் புறச் சூழலுக்கும் வெற்றிதேடித் தருபவர்களே மிகப் பெரும் தலைவர்கள். எல்லா நிர்வாகிகளும் தலைவர்களல்ல... ஆனால், சிறந்த எல்லாத் தலைவர்களும் நல்ல நிர்வாகிகளாகவும் இருப்பர்.

- ஆசிரியர்

# பாதுகாப்பு உத்தரவாதம் கேட்கிறார் பொன்சேகா

விடுதலைக்குப் பின்னான பொன்சேகாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட இருக்கின்றது.

விடுதலை செய்யப்பட்டதன் பின்னரான தனது பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் சரத் பொன்சேகா எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் மதத்தலைவர்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மாதுலுவே சோபித தேரர், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட பலர் சரத் பொன்சேகாவிற்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் மிக முக்கியமான பங்காற்றியவர் என்ற ரீதியில் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் இராணுவத் தளபதி அனுபவித்து வந்த சகல வசதிகள் சலுகைகளையும் மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

## மண்கும்பான் சாட்டிப் பகுதியில் மணல் ஏற்றுவதற்கு தடை

(வேலணை)

வேலணைப் பிரதேசத்தில் மண்கும்பான் சாட்டிப்பகுதியில் மணல் ஏற்றுவதற்கு கடந்த 16 ஆம திகதியிலிருந்து முற்றுமுழுதாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இது தொடர்பாக வேலணைப்பிரதேச செயலரிடம் கேட்டபோது கனியவள உத்தியோகத்தர்களும், தாமும் சாட்டி மண்கும்பான் மணல் ஏற்றப்படும் பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்ததாகவும், தனியாருக்கு சொந்தமான காணியில் மணல் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், இதனை அவதானித்த அதிகாரிகள் உடனடியாக மணல் ஏற்றுவதற்கு தடை விதித்ததாகவும் தெரிவித்தார்.

இப்பகுதியானது 5 கிலோமீற்றர் சுற்றுப்பரப்பளவைக் கொண்டது. இப்பகுதியிலிருந்து குழாய மூலமான குடிநீர் மண்டைதீவு தொடக்கம் ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றது. இப்பகுதியிலிருக்கின்ற கிணறுகளில் இருந்து நீர், நீர்த்தாங்கி மூலம் நயினாதீவு, வேலணை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளுக்கும் விநியோகம் நடைபெறு கின்றது. இப்படியான பகுதிக்ளில் மணல் அகழ்வை மேற்கொண்டால் நன்னீரற்ற பிரதேசமாக மாறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (85)

## தரம் 5 புலமை பரீட்சைக்கான மாகாண மட்ட முன்னோடிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் தரம் 5 புலமைப் பரீட்சைக்கு இவ்வருடம் தோற்றும் மாணவர்களுக்காக இம்மாதம் 5 ஆம் திகதியும், 19 ஆம் திகதியுமாக இரு முன்னோடி வினாத்தாள்களினை தயாரித்து பரீட்சைகளை நடத்தியுள்ளது.

இவ் முன்னோடி பரீட்சைத் தொடரின் மேலும் நான்கு பரீட்சைகளினை நடத்த திணைக்களம் உத்தேசித்துள்ளது. பரீட்சை நடைபெறும் திகதிகளாக 02.06.2012, 16.06.2012, 07.07.2012, 21.07.2012 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வினாத்தாள் திருத்தும் திகதிகளாக 03.06.2012, 17.06.2012, 08.06.2012, 22.07.2012 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் பரீட்சைகளை நடத்தி அதன் மறுதினமே வினாத்தாள்களைத் திருத்தி மாணவர்களுக்கு வழங்கும் செயற்றிட்டத்தை மாகாணக் கல்வித் திணைக்களம் கல்வி வலயங்களினூடாக மேற் கொண்டுள்ளது. (42)

## பொதுச் சந்தையில் ஒழுங்கீனம்; நுகர்வோர் பெரும் அசௌகரியம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில் அமைந்துள்ள பொதுச் சந்தையில் ஒழுங்கீனமாக நிறுத்தப்படும் துவிச்சக்கரவண்டிகளால் சந்தைக்கு வரும் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களை எதிரகொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

துவிச்சக்கர வண்டிகளை உரிய இடத்தில் நிறுத்துமாறு விளம்பர அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கின்ற போதும், சந்தைக்கு வரும் ஒரு சிலரின் கவனயீனத்தாலும், தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினாலும் பொதுமக்கள் அல்லல்ப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து, துவிச்சக்கர வண்டிகளை உரிய இடத்தில் நிறுத்தி வைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (138)

## பாடசாலைச் சூழலை பசுமையாக்க மரம் நடுகைத் திட்டம்

பாடசாலை சூழலை மர நடுகை மூலம் பசுமையாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட விருப்பதாக துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எல்.எம்.வெனிற்றன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னிப் பகுதியில் கடந்த கால நடவடிக்கைகள் காரணமாக பல பயன்தரு மரங்களும், நிழல் மரங்களும் அழிவடைந்துள்ளன. இதனால் பல பாடசாலை வளாகம் வெப்பம் தரும் இடங்களாக மாறியுள்ளதுடன், பாடசாலை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்கு உகந்த இடமாகவும் காணப்படவில்லை.

எனவே, துணுக்காய் கல்வி வலயத்தின் பாடசாலை வளாகங்களில் நிழல் தரக்கூடிய மரங்களை நாட்டும் வேலைத்திட்டத்தை மேற்கொள்ளவும் இதன் மூலம் பாடசாலைச் சுற்றாடல் குளிர்மையாகவும், பசுமையாகவும் உருவாக்க முடியும் என்ற அடிப்படையில் பாடசாலைகளில் மரம் நடுகைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய மர நடுகையின் போது நீண்ட கால நிழல் தரக்கூடிய மரங்களை பாடசாலை எதிர்கால திட்டத்திற்கமைய திட்டமிட்டு செயற்படுத்துமாறும் மேலும் மாணவர், ஆசிரியர், பெற்றோர் பங்களிப்பைப் பெற்று இச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ளுமாறும் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளினை துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (42)

# பண மோசடி குற்றச்சாட்டு; சந்தேக நபருக்கு அழைப்பாணை

பண மோசடியில் ஈடுபட்ட ஒருவரை நீதிமன்றுக்கு சமூகமளிக்குமாறு யாழ்நீதிமன்று நேற்று முன்தினம் அழைப்பாணை அனுப்பியது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதியில் ஐரோப்பிய பட்டப் படிப்புகள் கல்லூரி எனும் பெயரில் ஐரோப்பிய நாடுகளுக்கு மாணவர்களை அனுப்பிக் கல்வி கற்பதற்கு வசதி செய்து தருவதாகக் கூறி பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றியதாக அக்கல்லூரியை நடத்தி வந்த அஸ்மீர் கபூர் என்பவர் மீது யாழ்ப்பாண நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைதடி தெற்கைச் சேர்ந்த சிந்துஜன் (வயது-27) என்பவர் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார். ஐரோப்பிய நாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்ததால் தனக்கும், தனது சகோதரருக்குமாகச் சேர்த்து 12 இலட்சம் ரூபாவை மேற்படி நபரிடம் கொடுத்ததாகவும், தம்மை ஐரோப்பிய நாடுகளுக்கு அவர் அனுப்பி வைக்காமல் ஏமாற்றியதாகவும் பாதிக்கப்பட்டவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சந்தேக நபரை அடுத்த மாதம் 15ஆம் திகதி யாழ்.நீதிமன்றில் சமூகமளிக்குமாறு அழைப்பாணை அனுப்பும்படி யாழ். நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். பாதிக்கப்பட்டவர் சார்பில் சட்டத்தரணி கே.சுகாஸ ஆஜரானார். (137)

## நடவடிக்கை எடுக்காத சாவகச்சேரி நகரசபை

சாவகச்சேரி நகரசபை சந்தை நுழைவாயிலிற்கு அருகாமையில் தனங்கிளப்பு வீதியில் காணப்படும் வாய்க்கால் துப்பரவு செய்யப்படாத நிலையில் துர்நாற்றம் வீசுகின்றது. மேற்படி வாய்க்கால் சம்பந்தமாக நகரசபையில் பொதுமக்கள் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதன் அருகில் உணவகம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கிடைத்த மேற்படி சபையானது தங்களை இழிவுபடுத்துவதற்காகவே புனித முஸ்லிம் பள்ளிவாசலிற்கு முன்னாக உள்ள மேற்படி வாய்க்காலை துப்பரவு செய்யவில்லையென முஸ்லிம் மக்கள் உரையாடுவதை காணக்கூடியதாகவுள்ளது.

# மீள்குடியேறிய மக்களின் தேவைகளை நேர்த்தியாக பகுப்பாய்வு செய்யவேண்டும்



(யாழ்ப்பாணம்)

சிறந்த திட்டமிடலும் அதனூடான திட்டங்களும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வழிவகுக்கும் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம்-சில்லாலை சாந்தை கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை விநாயகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 75 கடற்றொழிலாளர்களுக்கு யு.என்.டி.பி நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யபபட்ட 14,68000 ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மீள்குடியேற்றத்திற்குப் பின் அந்தப் பிரதே சங்களில் பல்வேறு நிறுவனங்களால் பல திட்டங்கள் ஊடாக மக்களுக்கு உதவிகளை வழங்குகின்ற போதும், அவற்றில் சில திட்டங்களே அவற்றின் நோக்கத்தை அடைந்து வெற்றி பெறுகின்றது. எனவேதான் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது முதலில் அந்தந்த பிரதேசங்களினதும் மக்களினதும் தேவைகள் நேர்த்தியான பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும். அதனுடாக மேற்கொள்ளபடுகின்ற திட்டங்களே வெற்றிபெறும் எனத் தெரிவித்தார்.

மேலும் வடக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் இன்று அரசு பல கோடிக் கணக்கான நிதியினை செலவு செய்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகிறது. போருக்குப் பின் வடக்குப் பிரதேசத்தின் உட கட்டுமானம் உள்ளிட்ட ஏனைய துறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றது. தொடர்ந்து பணிகள் இடம்பெற்று வருகின்றது. நாம் தொடர்ந்தும் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திலும் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் பங்காளிகளாக இருப்போம். குறிப்பாக நிரந்தர குடிநீர் வசதி, மின்சாரம் உள்ளிட்ட விடயங்களில் கவனம் செலுத்தப்படும் எனத்தெரிவித்த அவர், சாந்தை கிராம விளையாட்டுக் கழகத்திற்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 75000 ரூபாவினை ஒதுக்கீடு செய்வதாகவும் குறிப்பிட்டார்.

சாந்தை, விநாயகபுரம் சனசமூக நிலைய உப தலைவர் கடம்பன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வலிகாமப் பிரதேச இணைப்பாளருமான பாலகிருஷ்ணன் (ஜீவன்), சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் முரளிதரன், வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளருமான ஜோன்சன் (ஜீவா) வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான செல்வராசா, மு.நடராஜா, வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினரான செலவக்குமார், யு.என்.டி.பி. தலைமை அதிகாரி ஞானகணேசன், யு.என.டி.பி. திட்ட உத்தியோகத்தர் சதீசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் நிரஞ்சலா, கிராம மட்ட அமைப்புக்கள், கடற்றொழிலாளர் சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சமாசத்தின் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தின் மூலமும், அங்கத்தவர் விபத்து நிதித் திட்டத்தின் மூலம் 4 இலட்சத்து 76 ஆயிரத்து 483 ரூபாவை அங்கத்தவர்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் வழங்கியுள்ளது.

சமாசத்தின் ஓய்வூதியத் திட்டத்தில் புதிதாக இணைந்து கொண்ட 14 அங்கத்தவர்களுக்கு ஏப்ரல் மாத ஓய்வூதிய நிதியாக 3 இலட்சத்து 96 ஆயிரத்து 142 ரூபாவையும், அங்கத்தவர் விபத்து நிதித்திட்டத்தின் மூலம் 20 அங்கத்தவர்களுக்கு 81 ஆயிரத்து 341 ரூபாவையும் வழங்கியுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தெய்வீக இசை

(இணுவில்)

இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்று வரும் வருடாந்த மகோற்சவத்தில் 23ஆம் திகதி இரவு 9 மணிக்கும், 24ஆம் திகதி இரவு 8 மணிக்கும், 25ஆம் இரவு 6 மணிக்கும், 26ஆம் திகதி 8 மணிக்கும் தென்னிந்தியப் புகழ் பால இசை அரசி செல்வி பி.சுசித்ராவின் தெய்வீக இசைக் கச்சேரியும், சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

## இருவருக்கு 3 ஆயிரம் அபராதம்

நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக குடியிருப்புக்கு அருகில் குப்பை போட்டிருந்த இருநபர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றம் 3000 ரூபா தண்டம் விதித்துள்ளது.

நல்லூர் ஆடியபாதம் வீதியில் ஒருவரும், கோண்டாவில் கிழக்குப் பகுதியில் ஒருவருமாக இருவர் தமது குடியிருப்புகளுக்கு அருகில் குப்பைகளைப் போட்டு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாகச் செயற்பட்டிருந்தனர்.

இவர்கள்மீது பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றில் வழககினைப் பதிவு செய்தனர்.

இவ்வழக்கினை விசாரித்த யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா ஒருவருக்கு 2000 ரூபாவும் மற்றவருக்கு 1000 ரூபாவும் தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார். (பா)

## பிணைகோரி வழக்குத் தாக்கல்

(திருநெல்வேலி)

தனங்கிளப்பு இளம்பெண் கொலை வழக்கில் 2ஆம் சந்தேக நபர் சார்பில் பிணைகோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி-தனங்கிளப்பில் கடந்த வருடம் 29ஆம் திகதி முதல் காணாமற்போய் பின்னர் இவ்வருடம் தைமாதம் 25 ஆம் திகதி அளவில் உருக்குலைந்த நிலையில் சடலமாகக் காண்டெடுககப்பட்ட சுப்பிரமணியம் புஷ்பமலர் (வயது-24) என்பவரின் கொலை தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சண்முகம் ஜெகன்மோகன், கதிரவேலு நவரத்தினம், சுப்பிரமணியம் சுரேந்திரன் ஆகிய இம்மூவரும் சாவகச்சேரி நீதவானின் உத்தரவின் பேரில் கடந்த ஒரு மாத காலமாக விளக்கமறியலில் இருந்து வருகின்றனர்.

இவர்களில் 2ஆம் சந்தேக நபரான கதிரவேலு நவரத்தினம் சார்பில் அவரது மகள் நவரத்தினம் பாமினி பிணை விண்ணப்பத்தை யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார். சட்டத்தரணி ஷர்மினி விக்னேஸ்வரன் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள இப்பிணை விண்ணப்பத்தில் கொலையுண்ட யுவதி 2ஆம் சந்தேக நபருக்கு மருமகள் உறவு முறை கொண்டவர் என்றும், அவர் கடத்தப்பட்டு கொலை செயயப்பட்ட சம்பவத்துடன் 2ஆம் சந்தேகநபர் எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் சந்தேகநபர் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்த சில பொய்யான கூற்றுக்களின் காரணமாகவே 52 வயதுடைய எனது தந்தை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பிணை மனுவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தாயை இழந்த தனக்கும் தனது சகோதரி மற்றும் அண்ணனுக்கும் தமது தந்தையாரே பராமரிப்பாளராக இருந்து வந்ததாகவும் குறிப்பிட்டிருக்கும் மனுதாரர் 2ஆம் சந்தேக நபருக்கு எதிராக குற்றப்புகார் தொடர்பில் எந்தவொரு ஆதாரமும் இல்லை எனவும் மேலும் தெரிவித்தா.

இப்பிணை மனுவில் எதிர்மனுதாரர்களாக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். எதிர்மனு தாரர்களுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி இப்பிணை விண்ணப்பம் தொடர்பில் ஆட்சேபனைகள் எதுவுமிருப்பின் அவற்றைத் தெரிவிக்குமாறு யாழ்.மேல் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (137)

## முகாமைத்துவ உதவியாளர்களை தரமுயர்த்தப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம், ஆங்கிலம் மும்மொழிகளிலும் நடைபெறவுள்ளது.

இதற்குத் தகுதியான அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்கள் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 18ஆம் திகதி முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

(வவுனியா)

கிளிநொச்சி, முல்லைத்தீவு பாடசாலை நூலகங்களுக்கான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும்முகமாக தனது ஆய்வுப் பிரிவின் வெளியீடுகளை பிரதான தமிழ் நூலகங்களுக்கு இலவசமாக வருடம் தோறும் அன்பளிப்புச் செய்து வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் திணைக்களத்தால் வெளியீடு செய்யப்பட்ட நூல்களும், திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சில நூலகளும், கிளிநொச்சி, முல்லைத்தீவு பாடசாலை நூலகங்களுக்கு ஒரு தொகுதியாக வழங்கப்படவுள்ளன.

இவ்வைபவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 8.30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர்மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வைபவத்தில் கலந்துகொணடு தங்கள் பாடசாலை நூலகத்திற்கென ஒதுக்கப்பட்ட நூல்களினைப் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு பாடசாலைகளை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (42)

## பயணிகளுக்கு சிரமமின்றி வீதிப் புனரமைப்பு அவசியம்



படம்: கலையகன்

(யாழ்ப்பாணம்)

பாரிய வீதிப்புனரமைப்பு இடம்பெறும் ஏ-9 வீதியில் பயணிகளும், வாகன சாரதிகளும் சிலவேளைகளில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏ-9 வீதியில் சுமார் 10 இடங்களில் வீதிப் புனரமைப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகிறன. இந்த இடங்களில் வாகனங்கள் தரித்துநின்றே பயணங்களைத் தொடர வேண்டிய நிலை இருக்கின்றது. வீதிப் புனரமைப்பு இடம்பெறும்போது ஒரு பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு மறு பகுதியில் இருந்து வரும் வாகனங்கள் பயணம் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

இவ்வாறான நேரங்களில் சுமார் 30 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பயணத்திற்காகக் காத்திருக்கின்றன. இதனால் நீண்ட நேரம் பயணங்களில் தடை ஏற்படுகின்றது.

அத்துடன் சில சந்தர்ப்பங்களில் இரு பக்கங்களிலும் வாகனங்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வாகனங்கள் இடைநடுவில் நேருக்குநேர் சந்தித்து தமது பயணங்களை மேற்கொள்ள முடியாத அவலநிலை ஏற்படுகிறது.

வீதிப்புனரமைப்பு மிகவும் முக்கியமானது. ஆயினும் பயணிகளின் போக்குவரத்திற்கோ சாரதிகளுக்கோ நெருக்கடிகள் ஏற்படாத வகையிலும் நேரவிரயம் இன்றியும் பயணங்கள் இடம்பெறக்கூடிய வகையில் வீதிப்புனரமைப்பு இடம்பெறவேண்டும் என பயணிகள் [illegible]. (ஜெ)

# நெல் விற்பனை செய்ய முடியாது வன்னி விவசாயிகள் அவதி

(ஒட்டுசுட்டான்)

வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சி, விசுவமடு, உருத்திரபுரம், ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, கற்சிலைமடு, மல்லாவி போன்ற பிரதேசங்களில் கடந்த பெரும்போகத்தின் பொழுது அறுவடை செய்த நெல்லினை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சிறுபோக நெற்செய்கைகள் இடம்பெற்று வருகின்ற இந்நேரத்தில், பெரும் போகச் செய்கையில் உற்பத்தி செய்த நெல்லினை விற்கமுடியால் தேங்கி இருப்பதனால் பெரும் பண நெருக்கடியினை எதிர்நோக்குவதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முள்ளிவளைப் பகுதியில் 70 கிலோ மூடை நெல் (வெள்ளை, சிவப்பு) 1960 ரூபாவுக்கும், சம்பா நெல் 2300 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுவதினை அறிந்து அப்பகுதிக்கு நெல் மூடைகளினை உழவு இயந்திரத்தில் ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து ஏற்றி சென்றனர். விவசாயிகளின் அந் நெல் தரமற்றவை என்று காரணம் காட்டி கொள்வனவு செய்யாமல் திருப்பி விடப்பட்டு உழவு இயந்திரத்தின் கூலியினை செலுத்திய துர்ப்பாக்கிய நிலையும் இப்பகுதி விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதே நேரம் தென்பகுதி வியாபாரிகள் இப்பகுதிகளில் 70 கிலோ மூடை நெல்லினை 1400 ரூபாவுக்கே கொள்வனவு செய்து வருகின்றனர். எனவே கமக்கார அமைப்புக்கள் மூலம் தமது நெல்லினை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துத் தருமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை பூநகரிப்பகுதியில் உள்ள 19 கமக்கார அமைப்பு பிரதேசங்களில் உள்ள பல நூற்றுக் கணக்கான விவசாயிகள் தாம் கால போகத்தில் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் பெரும் அல்லல் படுவதாக தெரிவிக்கின்றனர்.

அறுவடை காலத்தை அண்மிய நாட்களில் தனியார் அரிசி ஆலைச் சொந்தக்காரர்களும், பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கத்தினரும் பழைய இன நெல் வகைகளை மூடை 2200 ரூபாவுக்கும் ஏனைய நெல்லினங்களை 1600 ரூபாவிலிருந்து 1960 ரூபா வரை கொள்வனவு செய்தனர்.

இப்போது தனியாரோ பூநகரி ப.நோ.கூ. சங்கமோ நெல்லைக் கொள்வனவு செய்ய முன்வராத நிலையில் அமோக விளைச்சலை இம்முறை பெற்ற பூநகரி விவசாயிகள் தாம் விவசாயத்திற்காக பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாமல் அவதியுறுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அரசோ, ப.நோ.கூ. சங்கமோ தமது நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டு மென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(42, 112)

# அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை

அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்கு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பரீட்சை தமிழ் மொழி மூலம் மட்டும் நடத்தப்படவுள்ளதுடன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களும், மேற்பிரிவில் 10 ஆம் ஆண்டில் சித்தியைப் பெற்று 11 ஆம் ஆண்டில் கல்வியை மேற்கொளபவர்களும் ஏற்கனவே. பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்தவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் ஜுன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்திரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக தகவல்களை 18.05.2012 வர்த்தக மானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிடமுடியும்.

# குவியும் குப்பைகளை அகற்றுவது யார்?

புதுக்குடியிருப்பு - பரந்தன் சாலையில் அமைந்துள்ள எல்லையில் வடக்குத்திசை வீதி குப்பையும் கூழமுமாக பலநாட்களாகக் காட்சியளிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட எல்லையில் அமைந்துள்ள இவ் வீதியில் காய்ந்த மாவிலைகள், பொலித்தீன் உறைகள், வேப்பமரக்குற்றிகள் என்பன நிறைந்திருப்பதோடு, போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாக பொதுமக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


(138)

# கறுக்காய்த் தீவு முதலாமிடம்

(பூநகரி)

கிளிநொச்சி வலய தமிழ் மொழித்தினப் போட்டியில் தெனமோடிக்கூத்தில் கறுக்காய்த் தீவு மகா வித்தியாலயம் முதலாமிடத்தைப் பெற்றுக் கொணடுள்ளது.

சென்ற வாரம் வடமாகாண மட்டத்தில் நடைபெற்ற இப் போட்டியில் கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (112)





யுத்தத்தின் வடுக்களைச் சுமந்த பூநகரி - கௌதாரிமுனை தூய அந்தோனியார் ஆலயம் இதுவாகும். பாசையூர் பங்கினால் பராமரிக்கப்பட்டு வந்த இந்த ஆலயம் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. யுத்த அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்து காணப்படுவதையும், மக்களின் வழிபாட்டுக்காகத் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள சிறுகுடிசை ஆலயத்தையும் காணலாம். (21)

# முரசின் இன்றைய பலன்

(20.05.2012 -ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 07 ஆம் திகதி. அமாவாசை பின்னிரவு 5.42 வரை. நட்சத்திரம் பரணி சித்தயோகம் அமாவாசை விரதம், கார்த்திகை விரதம், கரி நாள். இராகுகாலம் 4.22 - 5.52 வரை. சுபநேரம் 8.52 - 10.22 வரை. எமகண்டம் 11.52 - 1.22 வரை. குளிகைகாலம் 2.52 - 4.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிய நட்பு, பந்தயங்களில் வெற்றி, மேலதிகாரிகள் ஒத்துழைப்பு, கனவு நிறைவேறும். |
| ரிஷபம் | நற்கீர்த்தி, அடிக்கடி யாத்திரை, புத்திரால் பாராட்டு, மனதில் புத்துணர்ச்சி. |
| மிதுனம் | ஸ்திரிகளால் செலவினம், காரியானுகூலம், குழந்தைகளால் மருத்துவச் செலவு, நட்பு. |
| கடகம் | கூட்டு முயற்சி, உற்சாகம், பெற்றோர் உதவி, குடும்பத்தில் நல்லுறவு, |
| சிம்மம் | சகோதரரால் உதவி, கொடுக்கல் வாங்கலில் இழுபறி, நினைத்த காரியம் வெற்றி, இடமாற்றம். |
| கன்னி | நற்காரியத்திற்கு கூடாத நாள், நெருக்கமான குடும்ப உறவு, கடன்படல், செலவுகள். |
| துலாம் | சாந்தமான மனநிலை, எண்ணம் போல் திருமணம், குறைவற்ற பணப்புரள்வு, நிர்ப்பந்தம். |
| விருச்சிகம் | விருந்தோம்பல், பெற்றோர் உதவி, பழைய கஷ்டங்கள் நீங்கும், அன்னியோன்ய வாழ்க்கை. |
| தனுசு | சாதாரணமான நாள், உடல் உபாதைகள், இருப்பிட சௌகர்யம், வழக்குகளில் வெற்றி. |
| மகரம் | வாழ்கையில் உற்சாகம், அகால போசனம், அரச உதவிகள் அதிகரிப்பு, புதிய ஒப்பந்தங்கள். |
| கும்பம் | பொருள் சேர்க்கை, நினைத்த காரியம் நிறைவேறும், திருமணம் கூடிவரும், போட்டியில் வெற்றி. |
| மீனம் | சகோதர சுகம், ஆன்மீக ஈடுபாடு, கௌரவமான பதவி வலிய வரும், உடல் நலனில் அக்கறை. |

# வலிகாமம் கல்வி வலய கணித வினாடி வினா போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வயலயத்திலுள்ள உடுவில், தெல்லிப்பளை, சங்கானை, சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டிருந்த கணித வினாடி வினாப் போட்டிகள் வெளியாகியுள்ளன. இப்போட்டி தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெற்றிருந்தது.

தமிழ் மொழிமூல போட்டிகளின் முடிவுகள்

தரம் -06

1 ஆம் இடம் க.கேணுகா அராலி சரஸ்வதி வித்தியாலயம், 2ஆம் இடம் அ.திவானா வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், 3ஆம் இடம் கே.குந்தவி அருணோதயாக் கல்லூரி.

தரம் - 07

1 ஆம் இடம் அ.கிருசாந் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், 2 ஆம் இடம் தி.சுகந்தினி வட்டு.மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் பா.சானு மகாஜனக் கல்லூரி.

தரம் - 08

1ஆம் இடம் த.சஜீபன் மகாஜனக் கல்லூரி, 2 ஆம் இடம் க.கஜேந்திரன் அராலி கிழக்கு அ.மி.த. பாடசாலை, 3 ஆம் இடம் ச.லிங்கேஸ்வரன் மகாஜனக் கல்லூரி.

தரம் - 09

1 ஆம் இடம் இ.இரஜிவர்ணன் மகாஜனக் கல்லூரி, 2ஆம் இடம் தே.வைஷ்ணவி யூனியன் கல்லூரி, 3 ஆம் இடம் ர.லோகிதா ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

தரம் - 10

1 ஆம் இடம் ம.துர்ஷிகா வசாவிளான் மகா வித்தியாலயம், 2 ஆம் இடம் சி.ஜானுசா உடுவில் மகளிர் கல்லூரி, 3ஆம் இடம் செ. அனுஜன் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

(தொடரும்...) (06)

# தமிழ் மொழித்தின விழா

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் தமிழ் மொழித்தின விழா எதிர்வரும் யூன் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

வலயக்கல்விப்பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

வலயமட்டத் தமிழ்த்தினப்போட்டியில் பங்கேற்று முதலாமிடங்களைப் பெற்றுக் கொண்ட போட்டியாளர்களின் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. சிறப்பாக நடனம், நாடகம், கூத்து என்பன நடைபெறவுள்ளன. நிகழ்விற்குப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (06)

# அலங்கார உற்சவம்

புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் அருள்மிகு ஸ்ரீ பொன்னம்பல ஞான வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் ஜுன் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் வசந்த மண்டபப் பூசை, மூலஸ்தான பூசை, கூட்டு வழிபாடு, சமய சொற்பொழிவு போன்றன இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(138)

# ஷாருக்கானைத் தடுத்தேன்

(மும்பை)

ஷாருக்கான் மைதானத்துக்குள் நுழைந்த போது அவரிடம் அனுமதி அட்டை இல்லாததால் தடுத்தேன். அப்போது அவர் என்னை தாக்க வில்லை. வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என மும்பை மைதான கிரிக்கெட் சங்க பாதுகாவலர் விகாஸ் தல்வி தெரிவித்தார்.

ஆனால் அவருடன் வந்த மெய்க் காப்பாளர்கள் என்னை தள்ளிவிட்டனர். நாங்கள் நினைத்தால் இந்த மைதானத்தையே விலைக்கு வாங்குவோம் என்று கூறி என்னை தள்ளி விட்டனர்.

மைதானத்தை மூடும் நேரம். இப்போது உள்ளே செல்ல முடியாது என்றேன். ஆனால் ஷாருக்கான் என்னை திட்டினார். அவருடன் வந்தவர்கள் என்னைத் தாக்கினார்கள். இந்த நேரத்தில் மதுவாடை வீசியதா? என்பது பற்றி என்னால் உணர முடியவில்லை எனத் தெரிவித்தார்.

# ஐ.பி.எல். ஆட்ட நிர்ணயம் இலங்கை வீரரும் சிக்கினார்




(மும்பை)

ஐ.பி.எல். போட்டியொன்றின் முடிவை நிர்ணயம் செய்வதற்காக இலங்கை கிரிக்கெட் வீரர் ஒருவருக்கு 10 கோடி இந்திய ரூபா (சுமார் 23 கோடியே 45 இலட்சம் இலங்கை ரூபா) வழங்கியதாக இந்திய குற்றவியல் பிரிவினரிடம் இந்திய சூதாட்ட முகவரான மாலத் என அழைக்கப்படும் சோனு யோகேந்திரா ஜலான் கூறியுள்ளதாக 'டைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழனன்று மும்பை நகரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையொன்றின்போது, ஐபயாஜி என அழைக்கப்படும் தேவேந்திரா கோதாரி மற்றும் இருவருடன் சோனு யோகேந்திரா ஜலான் கைது செய்யப்பட்டார்.

இவர்கள், பாரிய சர்வதேச கிரிக்கெட் சூதாட்ட வலையமைப்பொன்றின் அங்கத்தவர்களாக இருக்கலாம் என அதிகாரிகள் கருதுகின்றனர்.

இவர்களிடமிருந்து இரு மடிக்கணினிகள், ஒலிப்பதிவுச் சாதனங்கள், 25 செல்லிடத் தொலைபேசிகள் 5.18 இலட்சம் இந்திய ரூபா பணம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் சூதாட்ட தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

தமக்கு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் வாடிக்கையாளர்களும் சூதாடிகளும் உள்ளதாக கோதாரியும் சோனு ஜலானும் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் வலைமைப்பின் மாதாந்த பணப் புரள்வு சுமார் 500 கோடி இந்திய ரூபாவாகும். பாதாள உலகப் புள்ளியான சோட்டா சகீ லின் குழுவொன்றினால் . இவ்வலையமைப்பு கட்டுப் படுத்தப்படுவதாக நம்பப்படுகிறது.

சோனு ஜலான் கடந்த வருடமும் மற்றொரு சூதாட்ட விவகாரம் காரணமாக கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்ககது.

இவர்கள் ஐ.பி.எல். போட்டிகள் தொடர்பாக சூதாட்டப் பந்தயங்களை ஏற்றுக்கொள்வதாக தகவல் கிடைத்து. அத்தகவல்களின் அடிப்படையில் நாம் இவர்களை கைது செய்தோம். இந்த குழு நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாகும். சூதாட்ட மதிப்பீட்டு மென்பொருட்களை இவர்கள் கொண்டுள்ளனர். அவற்றின் உதவியுடன் சூதாட்ட வர்த்தகத்தை நடத்தி வருகின்றனர் என மேலதிக பொலிஸ்ஆணையாளர் தேவன் பார்த்திகூறியுள்ளார்.

தன்னை கைது செய்யாமலிருப்பதற்காக இந்திய பொலிஸ் அதிகாரியொருவருக்கு ஒரு கோடி (இந்திய) ரூபா வழங்கியதாகவும் ஆனால் தான் கைது செய்யப்பட்டதாகவும் முன்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சோனு ஜலான் கூறியிருந்தார். இது குறித்து லஞ்ச ஒழிப்புத் துறையினரிடம் புகாரிடப்போவதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் மற்றொரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இவ்விடயத்தில் தலையிட்டதையடுத்து அவர் பின்வாங்கினார்.

# லண்டனில் ஒலிம்பிக் தீபம்

(லண்டன்)

2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான தீபம் பிரித்தானியாவை சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதென்ஸ்சில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒலிம்பிக் தீபத்தை கால்பந்தாட்ட நட்சத்திரம் டேவிட் பெக்கம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பிரித்தானிய இளவரசி ஆன், ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாட்டு குழுவின் தலைவர் செபஸ்ரியன் கோ ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

ஒலிம்பிக் தீபம் இன்று முதல் 70 நாட்களுக்கு பிரித்தானியா முழுவதும் கொண்டு செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் முதல் கட்டத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்ற பென் ஏன்ஸ்லி தீபத்தை ஏந்திச் செல்லவுள்ளார்.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் ஜுலை மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பங்குபற்றியமை குறித்து கருத்து வெளியிட்ட டெவிட் பெக்கம், இந்த வாய்ப்பைப் பெற்றதில் மகிழ்ச்சி. இது போன்ற சந்தர்ப்பம் இனி வரும் காலங்களில் எனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்த ஒலிம்பிக் போட்டியில் லண்டனைப் பெருமையடையச் செய்யும் வகையில் அனைத்து வீரர்களும் முழு உத்வேகத்துடன் தமது திறமைகளை வெளிப்படுத்தி நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் எனத் தெரிவித்தார்.



# டெக்கான் வெற்றி

(புதுடில்லி)

இந்தியன் பிறிமியர் ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கெதிரான போட்டியில் டெக்கான் சார்ஜஸ் அணி ஐந்து விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

ராஜஸ்தான் ரோய்ல்ஸ் அணிசார்பாக அதிகபட்சமாக ராகுல் ட்ராவிட் 39 ஓட்டங்களையும், உவைய் ஷா 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

டெக்கான் சார்ஜஸ் அணிசார்பாக பந்துவீச்சில் டேல் ஸ்டெய்ன், வி.பி.சிங், அமித் மிஸ்ரா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

127 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜஸ் அணி 18.4 ஓவர்களில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 128 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது

டெக்கான் சார்ஜஸ் அணிசார்பாக அகஷசாத் ரெட்டி 42 ஓட்டங்களைப் பெற்றதுடன், ஷிக்கர் தவான் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

போட்டியின் சிறப்பாட்டகாரராக டெக்கான் சார்ஜ்ஸ் அணி வீரர் டேல் ஸ்டெய்ன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்டநாயகன் விருது வென்ற ஸ்டெய்ன் குறிப்பிடுகையில், நாங்கள் இந்தச் சீசனின் ஆரம்பப் போட்டிகளில் அடைந்த தோல்விகளே தொடரிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் அடுத்த ஆண்டு இடம்பெறும் தொடரில் முதல் நான்கு அணிகளுள் ஒரு அணியாக நாங்களும் செல்வோம். இந்தத் தொடரின் தோல்விக்கு ஒருவரை மட்டும் குற்றம் செல்வதில் நியாயமில்லை எனத் தெரிவித்தார்.

# தேசிய மட்ட வலைப்பந்து இறுதியில் யாழ். மாவட்டம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட வலைப் பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. கொழும்பு மகரகம தேசிய விளையாட்டரங்கில் இப்போட்டி நேற்று நடைபெற்றது. இதில் முதல் போட்டியில் மாத்தளை மாவட்டத்தை எதிர்கொண்ட யாழ். மாவட்ட அணி 28-04 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் பதுளை அணியை யாழ். மாவட்ட அணி சந்தித்தது. இதில் 23-02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட அணி தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் அனுராதபுரம் மாவட்ட அணியை யாழ். மாவட்ட அணி எதிர்கொண்டது. இதில் 26-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்று பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப்போட்டியில் குருநகர் மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சம பலம் கொண்டபோதும் யாழ். மாவட்ட வீராங்கனைகளின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான புள்ளிகளைப் பெற்றது. இறுதியில் 19-17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

(93)




# போதிய பயிற்சி இல்லை

(லாகூர்)

பாகிஸ்தான் வீரர்கள் எவரும் இந்தியன் பிறிமியர் லீக் தொடரில் பங்குபற்றாததன் காரண-மாக இலங்கைக்கெதிரான தொடரில் போதிய பயிற்சிகளின்றிக் காணப்பட வாய்ப்புக்களுண்டு பாகிஸ்தான் அணியின் மூத்த வீரரும், டுவென்ரி ருவென்ரி 20 அணியின் தலைவருமான மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார். எனினும் அணி முழுமையான தன்னம்பிக்கையுடனும், கவனத்துடனும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களாக பாகிஸ்தான் வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை எனத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், ருவென்ரி ருவென்ரி (உள்ளூர்) போட்டிகளிலும் கூடப் பங்குபற்றியிருக்கவில்லை எனத் தெரிவித்தார். உலகிலுள்ள ஏனைய வீரர்களை தங்களுடன் ஒப்பிட்டால், எல்லோருமே ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் சிறந்த பயிற்சிகளையும், தங்களுடைய திறமை-களையும் வளர்த்துக் கொண்டு காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# ஸ்ரோஸ் சதம் வலுவான நிலையில் இங்கிலாந்து

(லண்டன்)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி பலமான நிலையைப் பெற்றுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்தர்போல் 87 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். பந்து வீச்சில் புரோட் ஏழு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான நிலையைப் பெற்றுள்ளது. இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இங்கிலாந்து அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் அணித் தலைவர் ஸ்ரோஸ் 249 பந்துகளை எதிர்கொண்டு 19 பவுண்டரிகள் அடங்கலாக 121 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளார். மற்றும் ட்ரொட் 58, பீற்றர்சன் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் அணித் தலைவர் டரன் சமி, சாமுவேல்ஸ், ரோச் தலா ஓ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். தற்போது ஏழு விக்கெட்டுக்கள் கைசவமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 16 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

இதேவேளை, சதம் அடித்தது குறித்து கருத்துத் தெரிவித்த ஸ்ரோஸ், எனது கிரிக்கெட் வாழ்க்கை இந்த சதம் மிகவும் சிறப்பானது. கடந்த சில தொடர்களில் ஆட்டத் திறன் இழந்து தவித்த எனக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கும் வகையில் இதைக் கருதுகின்றேன் என்றார்.

## முன்பள்ளி விளையாட்டு

(தீவகம்)

வேலணை நாவலர் திருவள்ளுவர் முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் முன்பள்ளி விளையாட்டு விழா எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நாவலர் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாவலர் முன்பள்ளி ஆசிரியர் அனுயா சகுந்தலா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. மோகனேஸ்வரன், வேலணைப் பிரதேச சபைத் தவிசாளரும், வேலணை பிரதேச ஈ.பி.டி.பி. கட்சியின் அமைப்பாளருமான சிவராசா உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் முன்பள்ளி மாணவர்களுக்கான பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. (85)

## தெற்காசிய கால்பந்தாட்டப் போட்டி ஹென்றியரசர் மாணவனுக்கும் இடம்

(யாழ்ப்பாணம்)

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடைபெறவிருக்கும் 14 வயதுக்குட்பட்ட தெற்காசிய கால்பந்தாட்ட கொண்டாட்ட விழாவில் (ஃபுட்போல் ஃபெஸ்டிவல்) பங்குபற்றவுள்ள இலங்கை அணியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர் அன்தனிராஜ் ஞானேஸ்வரனும் இடம்பெறுகின்றார்.

சுமார் 30 வருடங்களின் பின்னரே இலங்கை கனிஷ்ட அணியில் இப்பாடசாலை வீரர் ஒருவர் இடம்பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.எஸ். நிரேஷ் என்பவரும் இந்த அணியில் இடம்பிடித்துள்ளார். இவர் ஏற்கனவே 13 வயதுக்குட்பட்ட அணியிலும் இவர் இடம்பிடித்திருந்தார்.

இதேபோன்று, களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவன் முஹம்மத் மமர் இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணிக்கு (14 வயதுக்குக் கீழ்) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 2011ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியிலும் இலங்கை தேசிய அணியில் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கால்பந்தாட்டப் போட்டித் தொடரில் பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவுகள், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளின் அணிகள் பங்குபற்றுகின்றனர். ஆசிய கால்பந்தாட்ட கூட்டுச் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நேபாள கால்பந்தாட்ட சங்கம் இதனை நடத்துகின்றது.

## விளையாட்டு அறிவை வளர்க்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களிடையே விளையாட்டு தொடர்பான பொது அறிவினை வளர்க்கும் முகமாக விளையாட்டு பொது அறிவு போட்டிகளை நடத்தும்படி கல்வி அமைச்சினால் மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டமென நான்கு மட்டங்களில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

மாவட்டப் போட்டிகளுக்கு ஒரு கல்வி வலயத்தில் இருந்து தலா இரண்டு அணிகள் கலந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் தொடர்பான விதிகள் கொண்ட அறிவுறுத்தல்கள் வட மாகாண கல்விப் பணிப்பாளரினால் அனைத்து கல்வி வலயங்களுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வட மாகாணத்தில் மாவட்ட மட்ட போட்டிகளானது பின்வரும் வலயங்களில் நடத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டப் போட்டிகள் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திலும் மன்னார் மாவட்ட கல்வி வலயப் போட்டிகள் மன்னார் கல்வி வலயத்திலும் வவுனியா மாவட்டப் போட்டிகள் வவுனியா கல்வி வலயத்திலும் முல்லைத்தீவு கல்வி வலயப் போட்டிகள் முல்லைத்தீவு கல்வி வலயத்திலும் கிளிநொச்சி கல்வி வலயப் போட்டிகள் கிளிநொச்சி கல்வி வலயத்திலும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு அணியிலும் நான்கு மாணவர்கள் இடம்பெற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாவாந்துறை றோ.க. சம்பியன்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற கால்பந்துப் போட்டித் தொடரின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி சம்பியனானது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலாமிடத்தை நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை அணியும், இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை தேவராளி இந்துக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன. (93)

## பாடசாலை மட்ட கபடி வென்ற அணிகள் விபரம்

(மட்டுவில்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கபடிப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டி 15, 19 வயது ஆண், பெண்களுக்கிடையில் இடம்பெற்றது.

இதில் 15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும், இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை வேலாயுதம் மகாவித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை கலட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும், மூன்றாமிடத்தை வேலாயுதம் மகாவித்தியாலய அணியும் பெற்றுக் கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை சென். ஜோம்ஸ் அணியும், மூன்றாமிடத்தை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை மெய்கண்டான் அணியும், இரண்டாமிடத்தை பருத்தித்துறை சென். தோமஸ் அணியும், மூன்றாமிடத்தை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன. (93)

## உடுவில் மகளிர் கல்லூரி ஹொக்கியில் தொடர் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற பெண்களுக்கான மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டித் தொடரில் உடுவில் மகளிர் கல்லூரி தொடர்ந்தும் ஐந்தாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது.

இப்போட்டித் தொடர் அண்மையில் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணி வீராங்கனைகளும் சிறப்பான முறையில் ஆடினர். இருப்பினும் சாதுரியமான முறையில் உடுவில் மகளிர் கல்லூரி அணியினர் ஒரு கோலைப் போட்டனர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் கோல் போடும் முயற்சியை மிகத் தீவிரப்படுத்தி செயற்பட்ட போதும் உடுவில் மகளிர் கல்லூரி அணியின் பிற்கள வீராங்கனைகளின் சிறப்பான ஆட்டத்தால் அது முறியடிக்கப்பட்டது. இறுதியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனானது.

இதேவேளை, பாடசாலை மட்டத்தில் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டி கடந்த 2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த ஆண்டு வரை உடுவில் மகளிர் கல்லூரி தொடர்ச்சியாக மாவட்ட சம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துரையப்பாவில் மெய்வல்லுநர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் நாளை முதல் தொடர்ந்து 3 தினங்களுக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை நடைபெறும் போட்டிகளில் 5 தெரிவுப் போட்டிகளும் 20 இறுதிப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாளான செவ்வாய்க்கிழமை நடைபெறும் போட்டியில் 5 தெரிவு போட்டிகளும் 20 இறுதிப் போட்டிகளும் மூன்றாம் நாளான புதன்கிழமை இடம்பெறும் போட்டியில் 8 இறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (12)




யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற மாவட்ட மட்ட ஹொக்கிப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொண்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி வீரர்கள் நிற்பதைக் காணலாம். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் முதலிடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு: சுரேஷ்)

## மல்லாகத்தில் இன்று எல்லே போட்டி

(மல்லாகம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ்.மாவட்ட பிரதேச தேசிய சேவைகள் இளைஞர் மன்றங்களுக்கு இடையே நடத்தப்படும் ஆண், பெண்களுக்கான எல்லே போட்டிகள் இன்று காலை மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ் மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களைச் சேர்ந்த ஆறுக்கும் மேற்பட்ட அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குகொள்ளும் அணிகளை உரிய நேரத்திற்கு போட்டிக் களத்திற்கு வருகை தந்து சிறப்புற போட்டியை நடத்தி முடிக்க ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் இப்போட்டியில் வெல்லும் அணிக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளும் வழங்கப்படும் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (93)

# உசுப்பேற்றும் அரசியல் மக்களை படுகுழிக்குள் தள்ளிவிடும்

சங்கர சிவன்

**ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வலுவான ஒற்றுமை நிலவியது. மக்களின் ஆதரவும் கிடைத்தது. அப்படியிருந்தும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமற்போனது ஏன் என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழ் மகனும் தனக்குள் கேட்க வேண்டும். இந்தக் கேள்விக்கான விடையிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கான முயற்சி மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது. அண்மையில் பம்பலப்பிட்டி அலுவலகத்தில் கூட்டமைப்பின் பழையவர்களும் புதியவர்களும் கூடி இதுபற்றிப் பேசிய போதிலும் இறுதி முடிவு சாத்தியமாகவில்லை. வழக்கம் போலத் தமிழரசுக் கட்சி காலை வாருகின்றது.

கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு அதிகம். தமிழரசுக் கட்சியின் ஆதிக்கம் என்று சொல்லலாம். இந்த ஆதிக்கத்திலிருந்து விடுபட விரும்புபவர்களே கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டுமென வலியுறுத்துபவர்கள். கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்தால் தமிழரசுக் கட்சியின் 'பெரியண்ணன்' பாத்திரம் தானாக மறைந்துவிடும். இதை விளங்கியதாலோ என்னவோ தமிழரசுக் கட்சி இன்னும் பச்சைக் கொடி காட்டவில்லை.

சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தை நிராகரிக்கின்ற போதிலும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறப் போவதில்லை. வெளியேறினால் பாராளுமன்றப் பிரவேசம் பகற்கனவு ஆகிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கூட்டமைப்பில் இப்போது ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியும், புளொட்டும் புதியவை. தமிழ்க் காங்கிரஸ் கழன்று போய்விட்டது. விநாயகமூர்த்தி ஐயா பாவம்! இப்போது காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற எல்லோரிலும் பார்க்க இவர் 'சீனியர்'. இன்று தனிமைப்பட்டு நிற்கின்றார்.

கூட்டமைப்பை ஸ்தாபனப்படுத்த முயற்சி மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒற்றுமை வலியுறுத்தப் படுகின்றது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற கோஷம் ஒன்றும் மக்களுக்குப் புதியதல்ல. இந்த ஒன்றுமைக் கோஷத்துடன் தான் தலைவர்கள் இவ்வளவு காலமும் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றார்கள்.

முதலில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஒற்றுமைக் கோஷம் போட்டார். பின்னர் தமிரசுக் கட்சிக்காரர்கள் ஒற்றுமைக் கோஷம் போட்டார்கள். பெரிய ஆரவாரத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒற்றுமையான அமைப்பாக வெளிவந்தது. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் முன்னாள் போராளிக் குழுக்களும் சேர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகிய வேளையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகிய வேளையிலும் தலைவர்கள் ஒற்றுமைப்பட்டதால் எல்லாம் சரியாகிவிடும் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். தலைவர்களும் அதையே சொன்னார்கள். ஆனால், மக்கள் எதிர்பார்த்த எதுவும் நடக்கவில்லை. இழப்புக்களையும், அழிவுகளையுமே மக்கள் சந்திக்க நேர்ந்தது.

தலைவர்கள் ஐக்கியப்படுவதால் மாத்திரம் பிரச்சினை தீராது என்ற பாடத்தை இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குச் சரியான கொள்கையும் யதார்த்தத்துக்கு அமைவான அணுகுமுறையுமே பிரதானமானவை.

தமிழரசுக் கட்சியிடம் சமஷ்டிக் கொள்கை இருந்தது என்று கூறலாம். எனினும் அக்கொள்கையில் தலைவர்களுக்குக் கருத்தீடுபாடு இருந்ததா என்பது இன்று வரை கேள்விக்குறியாகவே உள்ளது. தமிழர்களுக்கு மாத்திரமன்றி முஸ்லிம்களுக்கும் தனியான அலகு கோருகின்றோம் என்று கூறினார்களேயொழிய அது எந்த வகைப்பட்ட சமஷ்டி என்பது பற்றியோ சமஷ்டி அலகுகளுக்கான அதிகாரங்கள் பற்றியோ எவ்வித விளக்கத்தையும் எவரும் அளிக்கவில்லை. மேலும் சமஷ்டியை வென்றெடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்குப் பதிலாகத் தனியான தபால் சேவையை ஆரம்பித்தும் தனியான காணிக் கச்சேரியை நடத்தியும் நிலைமையைச் சிக்கலாக்கினார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினால் நிறைவேற்றப்பட்ட தனி நாட்டுத் தீர்மானம் ஒரு சந்தர்ப்பவாத ஏற்பாடு. தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுமே தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதான பங்காளிகள். தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்திய அதேயளவு தீவிரமாகத் தமிழ்க் காங்கிரஸ் சமஷ்டிக் கொள்கையை எதிர்த்தது. இந்த நிலையில் கூட்டணியின் கொள்கையாகச் சமஷ்டியை முன்வைப்பது சாத்தியமில்லை.

சந்தர்ப்பவாத ஏற்பாடாகத் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்த போதிலும் தலைவர்கள் அதில் கருத்தீடுபாடு கொண்டிருக்கவில்லை. அதனாலேயே ஐக்கிய தேசியக் கட்சி வழங்க முன்வந்த மாவட்ட சபையை ஏற்று அதற்கான தேர்தலில் போட்டியிட்டார்கள். புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகியது.

எனவே, தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் கூட்டமைப்புத் தலைவர்கள் இருந்தார்கள். தமிழ் மக்களின் நீண்ட அரசியல் வரலாற்றில் மோசமான இழப்புகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டதற்குத் தனிநாட்டுக் கோரிக்கையே பிரதான காரணம் என்று எவ்வித தயக்கமும் இல்லாமல் கூறலாம்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வலுவான ஒற்றுமை நிலவியது. மக்களின் ஆதரவும் கிடைத்தது. அப்படியிருந்தும் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமற்போனது ஏன் என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழ் மகனும் தனக்குள் கேட்க வேண்டும். இந்தக் கேள்விக்கான விடையிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. சரியான கொள்கையும் யதார்த்தத்துக்கு அமைவான அணுகுமுறையும் இல்லாததே இதற்குக் காரணம். சரியான கொள்கை இல்லாமல் தலைவர்கள் ஒற்றுமைப்படுவதால் ஒரு பலனும் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதிலும் ஒற்றுமைக் கோஷம் எழுப்புவதிலும் பார்க்கச் சரியான கொள்கையை வகுத்துக்கொள்வது முக்கியமானது. அதுவே முன்னுரிமை பெற வேண்டியது. ஆனால், கூட்டமைப்புத் தலைவர்கள் கொள்கைக்கு முக்கியத்துவம் அளிப்பதாக இல்லை.


இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்த வரையில் கூட்டமைப்பின் தலைமை மட்டத்தில் ஒத்த கருத்து இல்லை. தனிநாட்டுமாயையிலிருந்து விடுபடாதவர்களும் இருக்கின்றனர். சர்வதேசம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று மனப்பால் குடிப்பவர்களும் இருக்கின்றனர். ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வை நாடுபவர்களும் இருக் கின்றனர். இந்தநிலையில் இனப் பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கையை வெளியிடுவது கூட்டமைப் புக்கு இயலாத காரியம். எனவே தான், சில நிகழ்வுகளைப் பெரிதாகக் காட்டி மக்களுக்கு உணர்ச்சியூட்டி உசுப்பேற்றும் அரசியலில் ஈடுபடுகின்றார்கள்.

**இனப்பிரச்சினை தீராதிருப்பதனால் இடம்பெறும் சில சம்பவங்களைத் தங்கள் அரசியலுக்கான மூலதனமாக்கிப் பாராளுமன்ற ஆசனங்களைத் தக்கவைத்துக் கொள்கின்றார்கள். இது தமிழ் மக்களை மெல்ல மெல்லப் படுகுழிக்குள் தள்ளும் அரசியல்.**

இனப்பிரச்சினையின் தீர்வுக்காக இவர்கள் செயற்படவில்லை. இனப்பிரச்சினை தீராதிருப்பதனால் இடம்பெறும் சில சம்பவங்களைத் தங்கள் அரசியலுக்கான மூலதனமாக்கிப் பாராளுமன்ற ஆசனங்களைத் தக்கவைத்துக் கொள்கின்றார்கள். இது தமிழ் மக்களை மெல்ல மெல்லப் படுகுழிக்குள் தள்ளும் அரசியல்.

இனப்பிரச்சினையின் தீர்வில் கூட்டமைப்புக்கு உண்மையான அக்கறை உண்டென்றால் நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து வெளியிடவேண்டும். அந்தத் தீர்வுத்திட்டத்துடன் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் செல்ல வேண்டும். தீர்வை அடைவதற்கு யதார்த்தத்துக்கு அமைவான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.

# மீண்டும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அமெரிக்க அதிகாரிகள் நம்பிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச சலுகை மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் ஜி.எஸ்.பி.சலுகை குறித்த பரிசீலனையின் முடிவு சாதகமாக அமையும் என நம்பிக்கையோடு இருப்பதாக, அமெரிக்கா சென்றுள்ள இலங்கை தூதுக்குழுவிடம் அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்க விஜயத்தின் போது வெளிவிகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், பிரதி அமெரிக்க வர்த்தக பிரதிநிதி தூதுவர் டெமெற்றியஸ் மறன்டிஸ் ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார். இதன்போது ஜி.எஸ்.பி. பற்றிய பரிசீலனையை விரைவில் முடிக்கும்படி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கேட்டுக்கொண்டார்.

ரியூப், ரயர்கள், பொதி செய்யும் பொருட்கள், கையுறைகள், தும்புப்பொருட்கள், பீங்கான் பொருட்கள், நிலவிரிப்புகள் என்பன ஜி.எஸ்.பி. சலுகையின் கீழ் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலங்கையின் துரித பொருளாதார வளர்ச்சி, அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு சிறந்த வாய்ப்பை உருவாக்கும் என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார் என அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

2011 இல் இலங்கை பொருட்களை ஆகவும் கூடிய அளவில் வாங்கும் நாடாக அமெரிக்கா இருந்தது. இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் 22 சதவீதம் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# சீன கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவுடன் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு




(கொழும்பு)

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் மற்றும் சட்ட விவகார குழுக்களுக்கான பிரதிச் செயலாளர் வேவ் லிகுவான் தலைமையில் 20 பேர் அடங்கிய உயர் மட்ட குழுவினர் கொழும்பு வந்தடைந்தனர். இவர்கள் கொழும்புக்கு வந்து சேர்ந்ததும் ஜனாதிபதியினை சந்தித்து இருநாட்டு நல்லுறவினை மேலும் வலுப்படுத்தி மேம்படுத்துதல் உட்பட பல விடயங்கள் குறித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

# பங்கு வர்த்தக சர்ச்சைக்கு சமரச தீர்வு எட்டப்பட்டது

சர்ச்சைக்குரிய ரிஎப்சி நிறுவனத்திடம் இருந்து அதிக விலைக்கு கொள்வனவு செய்த பங்குகளை மீண்டும் ஒப்படைக்க, இலங்கை பங்குபரிவர்த்தனை ஒழுங்கு மையம் தேசிய சேமிப்பு வங்கிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி கொடுபனவுகளுக்கு பொறுப்பாக இருந்த சம்பத்வங்கி முகவராக இருந்த தப்ரபேன் தனியார் நிறுவனம் ஆகியவை பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு விடுத்த கோரிக்கையை அடுத்து இதற்கான இணக்கம் ஏற்பட்டது.

குறித்த ரி.எப்.சி.யின் 13 வீத பங்குகளை தேசிய சேமிப்பு வங்கி 390 மில்லியன் ரூபாய்களுக்கு கொள்வனவு செய்தது. அதுவும் குறித்த நிறுவனத்தின் பங்குகளின் முகப்பெறுமதி 30 ரூபாவாக இருக்கும் போது தேசிய சேமிப்பு வங்கி அவற்றை 49 ரூபாவுக்கு கொள்வனவு செய்தது.

இந்த நிலையில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இதற்கு அனுமதி வழங்காத நிலையில், வங்கியின் தலைவரான பிரதீப் காரியவசம் தமது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் இந்தப்பங்குகளை கொள்வனவு செய்திருந்தார்.

இதனையடுத்து எழுந்த சர்ச்சைகள் காரணமாக ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் குறித்த பங்குகொள்வனவுத் திட்டம் கைவிடப்பட்டது. இதேவேளை நேற்று குறித்த பங்கு வர்த்தகத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# கடற்கொள்ளைகளை கட்டுப்படுத்த திட்டம்

(கொழும்பு)

அதிகரித்துவரும் சோமாலிய கடற்கொள்ளையர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு ஏற்றவகையில் அவர்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட 7 நாடுகளின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் அபுதாபியில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை உட்பட இத்தாலி, சீசேல்ஸ், பாகிஸ்தான், கென்யா, தன்சானியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அதிகரித்து வரும் கொள்ளையர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி சட்ட ஒழுங்கினை நிலைநாட்ட வினைத்திறன் மிக்க இராணுவ நடவடிக்கைகள் அவசியம் என இதன்போது யோசனை முன்வைக்கப்பட்டது.


இந்தச் சந்திப்பில் உறையாற்றிய ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கான இத்தாலிய தூதுவர் ஜீவோஜியோ ஸ்டாரேஸ் கருத்து தெரிவிக்கையில், இராணுவ நடவடிக்கைகளில் மட்டுமே கவனம் செலுத்துவதன் மூலம் இந்த விடயத்தில் உரிய தீர்வை காணமுடியாது என தெரிவித்தார்.

சர்வதேச சமூகமானது பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவைக் கொண்டுள்ள சோமாலிய மக்களின் சமூக நிலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

இதேவேளை கடந்த ஆண்டு பல நாட்டு அரசாங்கக் கப்பல் சேவைகளுக்கு 690 கோடி அமெரிக்க டொலர்களை சோமாலிய கொள்ளையர்கள் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், கொள்ளையர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கப்பமாக வழங்கிய தொகை குறித்த துல்லியமான புள்ளி விபரங்கள் இல்லை என்று பிரிதொரு செய்தி தெரிவிக்கின்றது.

# ஹஜ் யாத்திரைக்காக விசேட விமான சேவை



(கொழும்பு)

இம்முறை ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளும் இலங்கை முஸ்லிம்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் ஐந்து அல்லது ஏழு விமானங்களை விஷேட சேவையில் ஈடுபடுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரதம அலுவலர் ஜி. பி. ஜயசேன ஆகியோருடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இந்த இணக்கப்பாடு காணப்பட்டிருப்பதாக அரச ஹஜ் குழுவின் இணைத் தலைவரும் பதிலமைச்சருமான ஏ.ஆர்.எம். அப்துல் காதர் தெரிவித்தார்.

இம்முறை ஹஜ் யாத்திரையை மேற்கொள்ளும் இலங்கை முஸ்லிம்களுக்கு சீரான விமான போக்குவரத்துச் சேவையைப் பெற்றுக் கொடுக்கப்படுவதன் அவசியத்தை சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின்போது எடுத்துக் கூறினேன்.

இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய அமைச்சர், நான் முன்வைத்த கோரிக்கையில் நியாயம் கண்டார் எனவும் பதிலமைச்சர் அப்துல் காதர் கூறினார்.

# பாலியல் பலாத்காரம்; பத்து மாணவர்கள் கைது

18 வயதுடைய இளம் பெண்ணொருவரை பாலியல் பலாத்காரம் செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 10 மாணவர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். கம்பஹாவைச் சேர்ந்த பிரபல பாடசாலையொன்றின் மாணவர்களே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த எட்டாம் திகதி வெசாக் பந்தல்களை பார்வையிட காலி முகத்திடலுக்கு வந்திருந்தபோது இந்த மாணவர்கள் பெண்ணொருவரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளதாக கோட்டை பொலிஸார், கோட்டை நீதவான் நீதிமன்றில் தெரிவித்தனர்.

கைதாகியுள்ள மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதால் அவர்களுக்கு பிணை வழங்குமாறு சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் கோரினார்.

எனினும், அந்த கோரிக்கையை நிராகரித்த நீதவான், மாணவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மாகாண சபையை கலைக்க வேண்டாம்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

வட மத்திய மாகாண சபையை கலைத்து தேர்தல் நடத்தும் திட்டத்தை கைவிடுமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அம்மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

நெல்லுக்கான குறைந்த விலை, வேலைவாய்ப்பின்மை, தொல்பொருள் பிரதேசங்கள் அழிக்கப்படுதல் போன்றவற்றினால் சாதகமற்ற கள நிலைமை உள்ளதாக மேற்படி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திசாநாயக்க இக்கடிதத்தில் கையெழுத்திடவில்லை. தரமற்ற உர விநியோகம், பிராந்தியத்தின் பல பகுதிகளில் நீர்வழங்கல் வசதிகள் இன்மை முதலானவை வடமத்திய மாகாண சபையை 1998 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சி செய்துவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியின் செல்வாக்கை குறைத்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளை கலைத்து செப்டெம்பர் மாதம் தேர்தல் நடத்தும் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை அரசியல் கட்சிகள் தமது செயற்பாடுகளை மீளமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. திடீர்த்தேர்தலை எதிர்கொள்வதற்கான வழிகள் குறித்து ஐ.தே.க. நேற்று கலந்துரையாடலொன்றை நடத்தியது. ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இக்கூட்டத்தில் மேற்படி 3 மாகாகாண சபைகளின் ஐ.தே.க. உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

# மாணவர்கள் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி


(கொழும்பு)

கிழக்கு பல்கலைகழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்கள் கடந்த 15 நாட்களாக மேற்கொண்ட வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டம் நிறைவுபெற்றுள்ளதாக பல்கலைகழக மாணவர் சங்கத் தலைவர் எஸ்.சிவா தெரிவித்தார்.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுடன் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த் தைகளை அடுத்து போராட்டம் நிறைவுபெற்றதாக அவர் தெரிவித்தார்.

அகில இலங்கை பல்கலைகழக மாணவர் சங்க தலைவர் எஸ்.புலேகொட மற்றும் கிழக்கு பல்கலைகழக நுண்கலைபீட மாணவர் சங்க பிரதிநிதிகள் அமைச்சருடனான சந்திப்பில் பங்கு கொண்டனர். மாணவர்களால் விடுக்கப்பட்ட கோரிககைகளை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படுமென உயர் கல்வி அமைச்சர் வழங்கிய உறுதிப்பாட்டை அடுத்தே போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் உதவி சிரேஷ்ட பதிவாளரை இடமாற்றுமாறு கோரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.



சிறுவயதில் தேவாரம் பாடமாக்குதல் என்பது மிகப்பெரிய சவால். கோவில்களில் தேவாரம் பாடினால் தான் கடவுள் வரம் தருவார் என்றும் சொல்லப்பட்டது. 'சொற்றுணை வேதியன்' பாடும்போது கல்லைக்கட்டி கடலில் போட்டபோது அவர் பாடியதை சும்மா நின்று கும்பிட்டுக் கொண்டிருக்கும் நான் ஏன் பாடவேண்டும் என நினைத்த காலங்களும் உண்டு. (கல்லைக்கட்டி கடலில் போடாட்டாலும் எமக்கு இன்னும் அதையொத்த துன்பங்கள் இருக்கின்றன என்று வாதிடுவது வேறு!)

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கடுமையான பொருளாதாரத்தடை இருந்தது. மின்சாரம் இல்லை, உடுப்புத் தோய்ப்பது பனங்களியில், மோட்டார் சைக்கிள்கள் பெற்றோல் சிறுதுளி விட்டு ஊதி ஸ்ராட் ஆகி




# தேவாரமும் நானும்...

- ஏ.கே -

பின்னர் மண்ணெண்ணெயில் ஓடியது! இரவில் மண்ணெண்ணை லாம்புதான். படிப்பதற்கு மேசை லாம்பு. சாதாரண தேவைகளுக்கு ஜாம் போத்தல் விளக்கு என்று ஒன்றிருந்தது! அந்தக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சிக்கன விளக்கு என நினைக்கிறேன். ஜாம்போத்தல் ஒன்றிற்குள் சிறிதளவு பஞ்சையிட்டு அதனுள் ஊறக்கூடியதாக சிறிதளவு மண்ணெண்ணையும் விட்டு சைக்கிள் ரியூப்பிலுள்ள வால்வை கழற்றி அதில் பேப்பரில் உருட்டிய திரியை பஞ்சில் தொடுமாறு நிறுத்தி எரியச்செய்வது தான் ஜாம்போத்தல் விளக்கு. அந்தக் காலங்களில் மாலை ஆறுமணிக்கு முன் விளக்கு சிமினிகள் துடைப்பதும் வீட்டில் ஒரு வேலையாக இருந்தது.

நான்கு வரிகள் தேவாரம் பாடமாக்கி விட்டு பின்னர் லாம்புச் சிமினியில் பேனை மூடியை உருக்கிக் கொண்டிருந்து வீட்டில் ஏச்சு வாங்குவதும் சாதாரணம். "தேவாரம் கத்திப் பாடமாக்குறான் எனக்கு பிறிம்பா ஒரு விளக்கு வேணும்" என்ற மாதிரியான முறைப்பாடுகளும் வேறு! ஆனாலும் தேவாரம் பாடமாக்கிறது ஒரு த்ரில்தான். பல முயற்சிகளின் பின்னர் தடங்கலில்லாமல் முழுத்தேவாரம் ஒன்றை சொல்லுவது மிகவும் உற்சாகமான விடயம்.

தேவாரம் பாடமாக்குவதில் செல்வாக்கு செலுத்திய இன்னுமொரு விடயமும் இருந்தது. இந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பல ஆலயங்களும் சமய அறிவுப்போட்டிகள் நடத்தி . பெறுமதியான பரிசில்கள் வழங்கினார்கள். தங்கப்பதக்கங்களும் அடக்கம். எனது பாடசாலையில் வேறு, கோவில்களில் அளிக்கப்படும் பதக்கங்களை பாடசாலையிலும் மீண்டும் சூட்டிக் கௌரவித்தார்கள். இதையெல்லாம் விட, இவ்வாறு போட்டிகளில் வெற்றிபெறுவோர் பெண்பிள்ளைகள் மத்தியிலும் கவனிப்பைப் பெற்றதால் தேவாரம் பாடமாக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு. அந்த வயதில் குரலும் கொஞ்சம் மாறத்தொடங்கியதால் ஒரு விதமான டபிள் குரலில் தேவாரம் பாடமாக்கி வீட்டாரை மட்டுமல்லாது பக்கத்து வீட்டினரையும் இம்சைப்படுத்தினேன்.

இதைத் தவிரவும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரும் ஆண்டுதோறும் சைவசமய அறிவுப் பரீட்சை வைத்து சான்றிதழ்கள் வழங்கினார்கள். அதிவிசேடம், விசேடம், திறமை, சாதாரணம் போன்ற தரங்கள் சான்றிதழ்களில் குறிக்கப்படும். இப்பரீட்சையில் திறமைச்சித்தி எடுத்தாலே பாடசாலையில் ஏதோ பிராணியைப் பார்த்தது மாதிரி பார்ப்பார்கள். இதனால் அதிவிசேடம் நோக்கியதாகவே தேவாரப் பாடமாக்கல்கள் இருந்தன.

கோவில்களில் பெரும்பாலும் வயதுபோனவர்கள் தான் தேவாரம் பாடுவார்கள். ஏதாவது உற்சவ காலங்களில் தான் இளையவர்கள் குறிப்பாக பெண்பிள்ளைகள் அழகாக இராகத்துடன் பாடுவார்கள். வயதானவர்கள் பாடும் தேவாரங்கள் அநேகமாக ஒரே தேவாரமாகவும் ஒரே இராகத்திலும் அமைந்திருக்கும். இங்கு நான் இராகமெனச் சொல்லுவது பாடுபவர்களின் தனிப்பட்ட இராகங்கள். அதற்கும் சங்கீதத்திற்கும் ஒருவேளை சம்பந்தமேயில்லாதிருக்கும். அவர்கள் பாடும் இராகத்தில் பெரும்பாலும் அவர்களின் தனிப்பட்ட இன்பதுன்பங்களும் கலந்திருக்கலாம். தேவாரம் பாடுவதற்கு சண்டை பிடிக்கும் கோவில்களும் உண்டு.

எனக்குத் தெரிந்து ஒரு சண்டை பிள்ளையார் கதை படிக்கும்போது இடம்பெற்றது. பிள்ளையார்கதை படிப்பதில் பெரும் போட்டி. காரணம் அது மைக்கில் (MIC) படிப்பதால் என நினைக்கிறேன்.

பிள்ளையார்கதை தொடங்கும் போது சின்ன சிட்டி ஒன்றில் கற்பூரம் கொளுத்துவார்கள். கதை படித்து முடியும் வரை தொடர்ச்சியாக கற்பூரம் போட்டுக்கொண்டே இருக்க வேண்டும். இதில் சவாலான விடயம் என்ன என்றால் பொருளாதாரத் தடையில் தடைவிதிக்கப்பட்ட பொருட்களில் பிரதானமானது கற்பூரம். எனவே வெகு சிக்கனமாகப் பாவிக்க வேண்டும். ஒரு கட்டி கற்பூரம் எரிந்து முடிந்து அடியில் அந்த வெள்ளை நிறம் மறைவதற்கிடையில் மறுகட்டியை போடவேண்டும். இந்தப் பெரும்பணி எனக்குத் தரப்பட்டிருந்தது. எனவே பிள்ளையார் கதையின் போது 'இலக்கண சுந்தரி...' ஆட்களை விட எனது 'கவனம் எல்லாம் கற்பூர ஜோதியிலேயே இருக்கும்.

அன்று அவ்வாறே படித்துக் கொண்டிருந்தபோது இரண்டு வயதானவர்களிற்கிடையில் சண்டை. முன்பே பொருந்திக்கொண்டதற்கு மாறாக சிலவரிகள் கூடப் படித்துவிட்டுத்தான் அடுத்த சந்தர்ப்பம் அளித்தாராம் என்று தொடங்கி காணிப்பிரச்சினை எல்லைப்பிரச்சினை எல்லாம் வந்து கடைசியில் ஐயர் நூல் சுற்றி வைத்திருந்த செம்புகளால் கைகலக்கும் நிலைமைக்குப் போனபோதும் பிள்ளையார் அமைதியாக இருந்தார்! ஆனால் நான் கொஞ்சம் ரென்சனாக இருந்தேன். ஏனெனில் சண்டையால், ஒதுக்கப்பட்ட நேரத்தை விட நேரம் நீடிப்பதால் கற்பூர கையிருப்பு வெகுவாகக் குறைந்து வந்தது. திருவெம்பாவை நேரங்களிலும் இவ்வாறான சண்டைகள் வருவதுண்டு.

அநேகமாக தமிழ்மொழிக்குத்தான் இந்த நிலை என்று நினைக்கிறேன். அதாவது தமிழுக்கே ஒரு உரைபெயர்ப்பு வேண்டிய நிலை! திருக்குறளில் இருந்து தேவாரங்கள் சங்ககாலப் பாடல்கள் ஈறாக படித்தவுடனேயே விளங்கிக் கொள்பவர்கள் அல்லது விளக்கம் சொல்லக்கூடியவர்கள் மிகச்சிலரே. மொழியின் தொன்மையால் ஏற்பட்ட இடைவெளியால் இது எற்பட்டது. எனவே தேவாரங்கள் பாடமாக்கியது போக அதற்கு பொருள் சொல்வது அதைவிட சவாலானது.

ஒரு இராணுவம் போரிட்டபடியே பின்வாங்குவதைப் போல நாமும் பண்பாடு கலாசாரம் என்று சொல்லிச் சொல்லியே அதிலிருந்து விலகிக்கொண்டு வருகிறோம். அல்லது வரவைக்கப்படுகிறோம். தற்போது நான் வேட்டி கட்டியே பலவருடங்கள் ஆகிவிட்டன. பழைய பாடமாக்கிய தேவாரங்கள் சிலதை ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன். ஒன்றிரண்டு வரிகளின் பின்னர் தடுமாறுகிறது. குனித்த புருவமும்... ஆலந்தானுகந்தமுது செய்தானை... நிலைபெறுமாறெண்ணுதியே... என்று சில ஞாபகம் இருந்தாலும் முழுமையாக நினைவில் இல்லை. என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே... எனும் தேவாரத்தை தர்ஷன் அண்ணா பாடசாலையில் அருமையாகப் பாடுவார்.


பதிவில் ஒரு தேவாரத்தையாவது முழுமையாகக் கொடுக்கவேண்டும் என்று முயற்சி செய்ததில் இத்தேவாரம் முழுமையாக வந்தது! அதிலும் 'மழபாடி' என்பதில் 'வனபாடி... வானம்பாடி' என்ற குழப்பங்கள் வந்ததில் வீட்டில் தொலைபேசி உறுதிப்படுத்திக் கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

**பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே**
**மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னை யல்லால் இனியாரை நினைக்கேனே.**

திருச்சிற்றம்பலம்.

## தொழில்நுட்பம் வளர்ந்தபடி... மனித உயிரின் மதிப்பு குறைந்தபடி...



தொழில் நுட்பத் திறனில் உயர்ந்த சமுதாயத்தை அண்ணாந்து பார்த்துப் பழகிய மூன்றாம் உலகத்து மக்கள் நாம். நம்மைக் காலனியத்துக்கு ஆட்படுத்தி, நசுக்கிச் சுரண்டிக் கொழுத்த ஐரோப்பிய நாடுகள் மீது நமக்கு இன்னும் அழியாப் பக்தி இருக்கிறது.

அதே போலவே மறுபக்கம் அமெரிக்காவைத் தெண்டனிடும் "புத்திசாலிகளும்" நம் ஊரில் நிறைய. சந்தேகமிருந்தால் கடந்த மார்ச்சின் பிறகு நம் தீவிரத் தேசியர்கள் பாடிய பரணிகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

அமெரிக்காவின் சரிவு ஆரம்பிக்கத் தொடங்கிய சில வருடம் முன்பு வரை அங்கு எப்போது போவோம் என்று கனவு காணாத மூன்றாமுலகத்தவர்களே இல்லை என்னுமளவுக்கு நிலைமை இருந்தது. அந்தப் பொறிநுட்பப் பொன்னுலகின் குணம் எத்தகையது?

அமெரிக்காவின் மாபெரும் இராணுவம், பொறி நுட்பத்தின் உச்சியில் உள்ள ஆயுதங்களைப் பிற பராரி மக்கள் மீது பிரயோகிப்பதில் எந்தத் தயக்கமும் காட்டாதது என்பது உலகறிந்ததே! அந்த நாட்டு இராணுவத்தில் வேலை செய்யும் சாதாரண சிப்பாய்களின் நிலை என்ன?

அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த F-22 விமானி ஒருவர், இந்த விமானத்தின் ஒரு காற்று வடிகட்டிப் பகுதி, சுவாசக் காற்றை நச்சுக் காற்றாக மாற்றுகிறது, அது தனக்கு பறக்கையில் மயக்கத்தைத் தந்து உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகச் சொல்கிறார். அவர் மட்டுமல்ல, பல விமானிகளும் இதே போன்ற மூச்சுத் திணறலும், மயக்கமும் தமக்கும் நேர்ந்ததாகச் சொல்கிறார்களாம்.

இந்த ஒரு "அற்பக்" காரணத்திற்காக விலை அதிகமான ஒரு விமானத்தை மாற்ற முடியுமா? அவரிடம், "சத்தம் போடாமல் இரு" என்று அமெரிக்க இராணுவம் சொல்கிறது. அவரை இராணுவ ஒழுக்கத்தை மீறியதாக குற்றம் சாட்ட முயற்சி நடக்கிறது. ஒரு வழியாக 'Whistleblower Act' மூலம் அவரை இப்போதைக்கு காப்பாற்றியிருக்கிறார்கள். இதில் இருக்கும் ஆபத்தான விஷயம் : விலை உயர்ந்த இராணுவ தளவாடத்திற்கு பதிலாக ஒரு மனித உயிரை விலை பேசலாம் என்ற எண்ணம். எதிர்கால மனித சமூகத்திற்கு அமெரிக்க முதலாளியத்தின் கொடை இது.

ஜப்பானில் விலை உயர்ந்த அணுசக்திப் பொறி நுட்பத்திற்காக ஜப்பானிய அரசாங்கமும், உயர் தொழில் வல்லுநர்களும், பெரும் மின்சக்தி நிறுவனங்களும், சாதாரண மக்களை எப்படி எல்லாம் அலட்சியமாகக் காவு கொடுத்தன என்பதைச் சொல்லும் கட்டுரைகள் இப்போது ஜப்பானிய சமூக ஆய்வாளர்களின் வழியாகவே நமக்குக் கிட்டுகிறது. உயர்கல்வியும், பெரும் செல்வமும், மக்களை மதிக்கக் கற்றுக் கொடுப்பதில்லை, அவர்களைச் சுரண்டுவதை மேலும் சாமர்த்தியமாகச் செய்யவே கற்றுக் கொடுக்கின்றன என்று தெரியவருகிறது. தம் நலன்களைத் தாமே காக்க மக்கள் விழிப்புணர்வோடு இருந்து ஜனநாயக அமைப்புகளைப் பேணாவிட்டால் எந்தக் கருத்தியலாலும் அவர்களுக்கு



ஒரு விடுதலையும் கிட்டாது என்பதே நாம் கவனிக்க வேண்டியது.

ஐரோப்பியரோ வெள்ளை நிறமல்லாதவர்கள் பொறுக்கிகள். அவர்களை உள்ளே விடுவதே தவறு என்று சொல்லும் புது நாஸி இயக்கங்களுக்கு வாக்களித்து பாராளுமன்றங்களுக்கு அனுப்பத் தொடங்கி இருக்கிறார்கள்.

எது எப்படி ஆனால் என்ன, அதி நவீன தொழிநுட்ப வளர்ச்சியால் ஆன இந்த வகைக் கருவிகள் பாதுகாப்பு தருவதை விட விளைக்கும் நாசமே கூடுதல்.

நாம் கவலைப்படத்தான் உலகில் எவ்வளவு விஷயங்கள் உள்ளன! இந்தக் கட்டுரையைப் படியுங்கள்.

http://www.wired.com/danger-room/2012/05/air-force-stealth-pilot/

# எதிர்ப்பரசியலைத் தொடர்ந்தால் பழங்குடியினர் நிலைமை வரும்!

- யதீந்திரா கட்டுரையிலிருந்து.



தமிழர் அரசியல் சூழலில் இடம்பெறும் சில உணர்ச்சிவசப்பட்ட விவாதங்களை உற்று நோக்கும்போது, தவிர்க்க முடியாமல் ஒரு கேள்வியை எழுப்ப வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாங்கள் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதில் உண்மையிலேயே எங்களிடம் தெளிவானதொரு புரிதல் இருக்கிறதா? இத்தகைய தெளிவின்மையின் விளைவாகவே தேவையற்ற விவாதங்கள் இடம்பெறுகின்றன. இந்த பின்புலத்தில் தான் சிங்கக் கொடி விவகாரத்தையும் நாம் பார்க்க வேண்டும்.

கொடிகுறித்து தமிழ் சூழலில் அதிருப்திகள் இருக்கலாம். அது கடந்த அறுபது வருடகால அரசியலின் தொடர்ச்சி. சிங்கக்கொடியை எரித்து அரசியல் செய்த வரலாறும் தமிழர்களுக்கு உண்டு. ஆனால் அது சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் வெறுப்பை வளர்ப்பதற்கு பயன்பட்டதைத் தவிர வேறு எதற்கும் பயன்பட்டதாக சான்றில்லை.

இப்போதும் அந்தக் கொடி இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களையும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது தான் இந்த பத்தியாளரின் கருத்தும் கூட. ஆனால் அதுவரைக்கும் அந்தக் கொடிதான் இலங்கையின் தேசியக் கொடி என்பதில் மாறுபட ஏதுமில்லை.

எனவே ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வரும், இரா.சம்பந்தன் இலங்கையின் தேசியக் கொடியை யாழ்ப்பாணத்தில் வைத்து உயர்த்திப் பிடித்திருக்கின்றார். சிங்கக்கொடியை தூக்குவதையோ அல்லது இலங்கையின் தேசிய கீதத்தை பயன்படுத்து வதனையோ இரா.சம்பந்தன் ஒரு சிக்கலான விடயமாகப் பார்க்கவில்லை. திருகோணமலையில் இடம்பெற்ற பிரேதசபை உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்விலும் சம்பந்தன் தேசிய கீதத்தை போடும்படி உத்தரவிட்டிருந்தார்.

முன்னர் விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது, புலிகள் பேச்சுவார்த்தையின் மீது உண்மையான விசுவாசத்தை காண்பித்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு, சர்வதேச சமூகத்தின் மத்தியில் உண்டு. அத்தகையதொரு நிலைமையை நாங்களும் தோற்றுவிக்கக் கூடாது.

அமெரிக்கா புலிகள் வீழ்ந்த மே.18 இனை, இலங்கையின் வெளிவிவகார அமைச்சரை சந்திப்பதற்கான திகதியாக திட்டமிட்டிருக்கிறது. இதன்போது சில முக்கிய முடிவுகளை கொழும்பு அமெரிக்காவிற்கு தெரியப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகையதொரு சூழலில் சம்பந்தன் ஐக்கிய இலங்கையின் மீதான பற்றுதியை வெளிப்படுத்திருப்பது அரசியல் ரீதியில் முக்கியத்துவம் உடைய ஒன்றாகவே பார்க்கப்படும்.

சம்பந்தனின் செயற்பாடு குறித்து கூட்டமைப்பிற்குள்ளும், சில தமிழ் தேசியவாத தரப்பினர் மத்தியிலும் சலசலப்புக்கள் காணப்பட்டாலும், மேற்படி நகர்வு ராஜதந்திர வட்டாரங்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. குறிப்பாக அமெரிக்க, இந்திய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் மத்தியிலும் வரவேற்கப்பட்டுள்ளது.

ஆனால் சம்பந்தனின் முடிவுகள் கூட்டமைப்பின் முடிவு அல்ல, அது அவரது தனிப்பட்ட முடிவு என்னும் தோற்றமே தொடர்ந்தும் பொது அரங்கில் காண்பிக்கப்படுகின்றது. இதுவே கூட்டமைப்பின் பலவீனமாகவும் .இருக்கிறது.

இந்த நிலைமை தொடருமாயின் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கும் ஆதரவு சக்திகளின் அதிருப்திகளை சம்பாதிக்க நேரிடும். இறுதியில் த.தே.கூட்டமைப்பு ஒரு நம்பகமான தலைமைக்குரிய தகுதியை இழக்கவும் நேரிடலாம்.

இன்றைய சூழலில் கனிந்திருக்கும் வாய்ப்புக்களை த.தே.கூட்டமைப்பு சரியாக பயன்படுத்திக் கொள்ளத் தவறின் தமிழ் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவினர் பழங்குடியினர் நிலைக்கு தள்ளப்படுவது உறுதி. எனது நண்பர் ஒருவர் எதிர்ப்பரசியல் குறித்து பேசிக்கொண்டிருக்கும்போது, ஒரு முக்கியமான விடயத்தை குறிப்பிட்டிருந்தார். குறித்து வைத்துக் கொள்ளுங்கள் - எல்லாவற்றையும் புறக்கணிக்கும் இந்தவகை எதிர்ப்பரசியலை தொடருவீர்களானால், ஒரு காலத்தில் வன்னி, வாகரை போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் உல்லாசப் பிரயாணிகள் வேடிக்கை பார்க்கும் மக்களாக மாறுவர். சில நாடுகளில் அப்படி வேடிக்கை பார்க்கப்படும் மக்கள் பிரிவினர் இருக்கின்றனர். அத்தகையதொரு நிலைமை எங்களது மக்களுக்கும் நேரும்.

எனவே சம்பந்தன் சிங்கக் கொடியை தூக்கியதால் தமிழரின் மானம் காற்றில் போனதா இல்லையா என்னும் விவாதங்களில் நேரத்தை விரயம் செய்வதை விடுத்து, மக்களின் உண்மையான வாழ்நிலைமைகளை கருத்தில் கொண்டு வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்திக் கொள்வதில் அனைவரும் ஒன்றுபடுவதே இன்றைய தேவையாகும்.



## சாந்தகுமாரி



பழைய பட ரசிகர்கள் இவரை இப்போது கூட நினைவில் வைத்திருக்க முடியும். ஏனென்றால் அந்தக் காலத்தில் மிகப் பிரபலமான இரண்டு படங்களைப் பார்க்காத தமிழர்கள் இருக்கவே முடியாது.

1. சிவந்தமண் (1969)
2. வசந்தமாளிகை (1972) இந்த இரண்டு படங்களிலும் கதாநாயகனுக்கு அம்மாவாக நடித்தவர் சாந்தகுமாரி!

சிவந்த மண்ணில் "பாரத்" என்றும் வசந்த மாளிகையில் "ஆனந்த்" என்றும் கதை நாயகனை அடிக்கடி அழைக்கின்ற இவர் குரல் இப்போதும் கூட காதில் ஒலிக்கும்!

இவரை ஒரு துணை நடிகை என்று தான் பலரும் நினைத்திருப்பார்கள். ஆனால் இவர் ஒரு சிறந்த வயலின் கலைஞர். 1930களின் தொடக்கத்தில் D.K.பட்டம்மாளின் கர்நாடக சங்கீத கச்சேரிகளில் இவர் தான் வயலின் பக்க வாத்தியம் வாசிப்பவராக இருந்திருக்கிறார்.

1936-ல் விதிவசத்தால் நடிகை ஆகியிருக்கிறார். அப்போதே "நவீன சாரங்கதரா" (1936) படத்தில் நடிக்கும்போதே டைரக்டர் புல்லையா வை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

ஒரு கர்நாடக சங்கீத வாத்தியக் கலைஞர், சினிமாவில் கதாநாயகியாக மாறி, ஒரு பிரபல இயக்குநருக்கு மனைவியாகி, அதன் பின் ஒரு மிக சாதாரண துணை நடிகை!

## பொம்பளை சிவாஜி




மனோரமாவை செல்லமாக "பொம்பளை சிவாஜி" என்றும் அழைப்பார்கள். இவர் சிவாஜியுடன் நூற்றுக் கணக்கான படங்களில் சேர்ந்து நடித்துள்ளார் என்றாலும் இருவரும் ஜோடியாக நடித்த ஒரே படம் "ஞானப் பறவை". இந்தப் படத்தில் சிவாஜி கணேசன் கதாபாத்திரம் கிட்டதட்ட யாகவா முனிவரைப் போல் இருக்கும்.

## சபாபதி



SABAPATHY - 09.01.1942
PADMA, T.R. RAMACHANDRAN
DIR: AV. MEIYAPPAN - A.T. KRISHNASAMY MUS: SARASWATHY STORES ORCHESTRA

தமிழ்த் திரைப்படங்களில் முதல் முழு நீள நகைச்சுவைப் படம் "சபாபதி".

டி.ஆர்.ராமசந்திரன் கதாநாயகனாகவும், ஆர்.பத்மா கதாநாயகியாகவும் நடித்த இந்தப் படம் இரண்டு மாதத்தில் 40,000 ரூபா செலவில் எடுத்து முடிக்கப்பட்டது.

டி.ஆர்.ராமசந்திரன் அவர்களுக்கு மாதம் 70 ரூபா வீதம் இரண்டு மாதத்துக்கு 140 ரூபாவும், ஆர்.பத்மாவுக்கு 90 ரூபாவும் சம்பளமாக வழங்கப்பட்டதாம்!

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என்று நான்கு மொழிகளில் 318 படங்கள் நடித்து குவித்துள்ளார் நடிகையர் திலகம் சாவித்திரி. அந்த நாட்களில் அவருடைய படங்கள் மட்டும் வருடத்திற்கு குறைந்தது பத்து முதல் பதினைந்து படங்கள் வெளியிடப்படுமாம்.

திரைப்படத்தில் நடிப்பதற்கான ஸ்க்ரீன் டெஸ்ட் சாவித்திரிக்கு பதினான்கு வயதில் எடுக்கப்பட்டது. ஆனால் மிகவும் சிறிய பெண்ணாக இருந்ததால் அது கைவிடப்பட்டது. அதன் பின் பதினாறு வயதில் எல்.வி.பிரசாத்தின் படத்தில் இரண்டாவது கதாநாயகியாக அறிமுகமானார். அதுதான் சாவித்திரியின் திரைவாழ்கையில் முதல் பெரிய மைல்கல்.

சாவித்திரி, ஜெமினி கணேசன் ஜோடியின் ஹிட் படங்களின் ஒன்று மிஸ்ஸியம்மா. இந்தப் படத்தில் கதாநாயகியாக முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டவர் பானுமதி. பின்னர் பானுமதியின் கறாரான போக்கினால், சாவித்திரி மிஸ்ஸியம்மாவானார்...

## மிஸ்ஸியம்மா




நடந்தது இதுதான். படத்தின் அத்தனை பாடல்களையும் பாடுவதற்கு அந்நாளில் பிரபல பாடகியான பி.லீலா ஒப்பந்தம் செய்யப்பட்டார். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த பானுமதி, தனக்குப் பின்னணிப் பாடகி வேண்டாம் என்றும், தன் சொந்த குரலில்தான் அத்தனை பாடல்களும் பாடுவேன் என்று கண்டிப்புடன் கூறியிருக்கிறார். இதனால் கடுப்பான தயாரிப்பாளர் பாடகிக்குப் பதிலாக கதாநாயகியையே மாற்றிவிட்டார். இதனால்தான் பானுமதிக்குப் பதில், சாவித்திரி.

பின் குறிப்பு: பானுமதியுடன் நடிக்க வேண்டும் என்கிற ஜெமினியின் நீண்டகால ஆசை. கடைசியில் அது நிறைவேறாமல் போய் விட்டது.

## கண்ணாம்பா



கிரிக்கட் பெண்கள் விளையாடும் ஆட்டம் அல்ல. அதிலும் [illegible] தான பெண்களுக்கு இது ஏற்றதே அல்ல. இருந்தும் இங்கு [illegible] ம்பா மட்டை பிடித்திருப்பதைப் பார்த்தால் செஞ்சரி போட்டு [illegible] டுத்தான் வெளியேறுவார் போலிருக்கிறதே.

கிரிக்கெட் மோகம் அந்தக் கால திரை நட்சத்திரங்களையும் விட்டு வைக்கவில்லை. கண்ணகி, மனோகரா போன்ற படங்களில் நடித்த, தனது கணீர் வசனங்களுக்குப் பேர்போன நடிகை கண்ணாம்பா கிரிக்கெட் ஆடும் படம்... பழைய பத்திரிகை ஒன்றிலிருந்து.

# லுணுவில மீன்வலைத் தொழிற்சாலையின் மேம்பாடு தொடர்பில் ஆராய்வு





(யாழ். நிருபர்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான வடகடல் நிறுவனத்தின் லுணுவில மீன்வலைத் தொழிற்சாலையின் தொழிற்துறை நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

லுணுவில பகுதியில் அமையப் பெற்ற மீன்வலைத் தொழிற்சாலை கைத்தொழிற் பேட்டைக்கு அமைச்சர் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டதுடன், அது தொடர்பில் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை தொழிற்சாலைப் பணியாளர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், அவர்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தறிந்து கொண்டார்.

அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கும் போது தற்போது மாதம் ஒன்றிற்கு பதினையாயிரம் கிலோகிராம் நிறையுடைய மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்யப்பட்டுவரும் நிலையில், எதிர்காலங்களில் 18 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய வலையை உற்பத்தி செய்யுமிடத்து சம்பள உயர்வு, மேலதிக கொடுப்பனவு உள்ளிட்ட பணியாளர்களது நலன்சார் விடயங்களில் கவனம் செலுத்தப்படுமென அமைச்சர் உறுதிமொழி வழங்கினார்.

அத்துடன் தொழிற்சாலையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு விசேட அமைச்சரவைப் பத்திரம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பிலும், பணியாளர்களது கோரிக்கைகளின் அடிப்படையில் துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி உரிய தீர்வு பெற்றுத்தரப்படும் எனவும், எதிர்காலங்களில் தொழிற்சாலையின் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, வடகடல் நிறுவனத் தலைவர் பரந்தாமன் ஆகியோர் உடனிருந்தனர்.

## மின்சாரத்தை காக்கும் தேசிய வேலைத்திட்டம்

நாட்டின் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மின்சாரத் தட்டுப்பாட்டினை குறைக்கும் நோக்குடன் அரசினால் மின்சாரத்தை காக்கும் தேசிய வேலைத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக மின்சாரப் பாவிப்பு அதிகமாக இருக்கும் நேரமான இரவு 7.00 மணி முதல் 9.00 மணிக்கு இடையில் 60 வாட்ஸ் ஒரு மின் குமிழையாவது நிறுத்தி இவ் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு ஊடகங்கள் மூலம் விளம்பரப் படுத்தப்பட்டு வருகின்றது.

இம் மின்சாரத்தைக் காக்கும் தேசிய வேலைத் திட்டத்தில் மேலும் ஓர் அங்கமாக பாடசாலை மாணவருக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் பிரசாரங்களை பாடசாலை ரீதியாக மின்சக்தியுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் வருகை தந்து கருத்துரைகளை வழங்குவதன் மூலம் மாணவர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றனர். (42)

# நாடகத் திறன்காண் போட்டிகள்

கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் நாடக மன்றம் வேததிய விருதிற்காக அகில இலங்கை ரீதியாகவும் தமிழ் பாடசாலைகளுக்கிடையிலான நாடகத்திறன்கான் போட்டிகளினை நடாத்தத் தீர்மானித்துள்ளது. அதற்கான விண்ணப்பங்களினைக் கோரியுள்ளது. 1960 ஆம் ஆண்டு முதல் இம் மன்றமானது நவரசமும் நடனமிடும் நற்கலையெனும் நாடகத்திற்கு நற்பணிகள் ஆற்றி வருகின்றது. அந்த வகையில் இவ்வருடம் நாடகமன்றப் போட்டிகளை விரிவுபடுத்தும் நோக்கில் மாவட்ட ரீதியாகச் சென்று போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

பாடசாலைகளின் நன்மை கருதி அப் பாடசாலைகளுக்கு அருகில் உள்ள ஓர் இடத்தில் போட்டியில் கலந்து கொள்ளுமாறு இம்மன்றம் கோரியுள்ளது. அவ் அடிப்படையில் பின்வரும் இடங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

02.06.2012 அன்று மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், 04.06.2012 திருகோணமலை கோணேசர் இந்துக் கல்லூரி, 09.06.2012 யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், 10.06.2012 வவுனியா - இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம், 16.06.2012 ஹட்டன் ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, 30.06.2012 கொழும்பு றோயல் கல்லூரி ஆகிய இடங்களில் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இப் போட்டிகளில் பிரதேச ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெறும் நாடகங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதோடு, அகில இலங்கை ரீதியாக பரிசில்களும் வேத்திய நவரச கேடயமும் வழங்கப்படவுள்ளது.

இவ் நாடகங்கள் 20 - 30 நிமிடத்திற்கு இடைப்பட்டதாகவும், இருபது கதாபாத்திரங்களுக்குட்பட்டதாகவும் 31.06.1994 இற்குப் பின் பிறந்த மாணவர்கள் மட்டும் பங்குபற்ற வேண்டும் எனவும், மேடையேற்றப்படும் நாடகங்கள் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு நெறியாள்கை செய்யப்படவேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)

# பிள்ளைகள் தமது உணர்வுகளை ஆரோக்கியமாக கையாள வேண்டும்

### வைத்திய கலாநிதி புவனலோஜினி

(யாழ். நிருபர்)

"சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத விடயங்கள் அறிமுகப்படுத்தப்படும்போது தம்மை வழிநடத்தும் பெற்றோர் அல்லது ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்த மாணவர்கள் முன்வர வேண்டும்" என யாழ். போதனா வைத்தியசாலை உளவள ஆலோசகர் வைத்திய கலாநிதி புவனலோஜினி ஜீவானந்தம் தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இக்கருத்தரங்கில் தொடர்ந்து அவர் பேசுகையில்,

இன்று எமது பிரதேசம் கலாசாரப் பிறழ்வுகளையும், பணபாட்டு ரீதியான பின்னடைவையும் எதிர்நோக்கியுள்ளது. கட்டிளமைப் பருவத்தினரே இத்தகைய பிரச்சினைகளுக்குக் காரணமாயுள்ளனர்.

குடும்பம், பாடசாலை, சமூகச் சூழல் எனபவற்றில் இருந்து பல்வேறு அனுபவங்களையும், அறிவினையும் பெற்றுக்கொள்ளும் கட்டிளமைப் பருவத்தினரில் ஒரு சிலர் விரும்பத்தகாத செயல்களுக்கு அடிமையாகி விடுகின்றனர்.

மது, போதைவஸ்து, பாலியல் தொடர்பான விடயங்கள் என்பவற்றில் மாணவப் பருவத்தினர் விழிப்பாக இருக்க வேண்டும். பெரும்பாலான பிள்ளைகள் தெரியாமல் இத்தகைய பிரச்சினைகளில் மாட்டிக் கொள்கின்றனர்.

உணர்வுகளுக்கு அடிமையாகும் வயது என்பதால் தெரியாமல் தவறிழைக்க சந்தர்ப்பம் ஏற்படலாம். பிள்ளைகள் தமக்கு ஏற்படும் உணர்வுகளை அடையாளம் கண்டுகொள்வதோடு அவற்றை ஆரோக்கியமான முறையில் கையாளவும் பழகிக் கொள்ள வேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில் தரம் 9 - 11 மற்றும் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களும் கலந்து கொண்டனர். உப அதிபர் இ.அருணகிரிவாசன் நன்றி நவின்றார். (10)

# கண்டியில் இரட்டைக் கொலை
## வீடு புகுந்த சிப்பாய் வெறியாட்டம்

(கண்டி)

கண்டி - குளுகம்மன பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் புகுந்த இராணுவச் சிப்பாய், அங்கிருந்த தாய், தந்தை மற்றும் மகள் ஆகியோர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளார். இந்த சம்பவத்தில் தாயும், மகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். இந்த குற்றச் செயலில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாயும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உயிரிழந்த யுவதியின் சகோதரர் துப்பாக்கிச் சூட்டை நடத்திய சிப்பாயை பிடித்து கடுமையாக தாக்கியதால், சிப்பாய் காயமடைந்துள்ளதாகவும் அவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

# பணத்திற்குப் பதிலாக பால்மாவே தருவோம் பண்ணையாளரை வலியுறுத்தும் கம்பனி




(கொழும்பு)


மலையகத்தில் இம்மாத தொடக்கத்தில் பால் கொள்வனவை சடுதியாக நிறுத்திய பெரிய பால் கம்பனியொன்று பாலுக்கான கொடுப்பனவாக பால்மாவை பெற்றுக்கொள்ள சம்மதித்தால் மட்டுமே தம்மிடமிருந்து பாலை கொள்வனவு செய்யும் என தமக்கு அறிவித்துள்ளதாக மத்திய மாகாண பாற்பண்ணை விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளிடமிருந்து பாலை கொள்வனவு செய்வது இலாபகரமானதாக இல்லாததால் பணத்துக்குப் பதிலாக பால்மாவை ஏற்றுக்கொண்டால் மட்டுமே பாலை கொள்வனவு செய்ய முடியும் என தமக்கு அறிவிக்கப்பட்டதாகவும் இவ்வாறான ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டால் தமக்கு நன்மை ஏதும் கிடைக்காது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை பிள்ளைகளுக்கு ஒரு கிளாஸ் பால் வழங்கும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் திட்டம் வெற்றியளித்துள்ளது. இதனால் தனியார் கம்பனிகளுக்கு பால் விற்றால் லீற்றர் 50 ரூபா விலைக்கு தம்மால் பாலை விற்க முடிகிறது எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றன.

ஆயினும் பாடசாலைகளில் பால் வழங்கும் திட்டம் நிறுத்தப்படுமாயின் பாற்பண்ணை விவசாயிகள் மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளப்படுவர் என அவ்விவசாயிகள் மேலும் கூறினார்.

## கிளி. வைத்தியசாலையில் நோயாளர் இளைப்பாறும் பூங்கா



படம் : ஜெ.கலையகன்



# கல்வி முரசு

## ஆங்கிலம் மூலம் அறிவோம்



### Idiom of the Day

**Cook the books / cook the accounts**

Meaning: If someone cooks the books, or cooks the accounts, they keep inaccurate accounts for a business, usually in order to pay less tax.

For example:

Their accountant was charged with cooking the books, and now he's in jail.

I found this website that shows you how to cook the accounts, but I'd never try doing it.

### Saying of the Day

**Death keeps no calendar**

Possible interpretation: In this saying, "Death" is personified as a spiritual being who may call upon us at any time - he has no appointment book. We never know when we will die.

Note: Death (noun) = personification of the force that destroys life | death (noun) = the act of dying; the end of life | calendar (noun) = chart showing the days, weeks and months of each year; diary; datebook

### Phrasal Verb of the Day

**Bring forward**

Meaning: to change the date or time of an event so that it happens earlier than originally planned

For example:

Bring sth forward Let's bring the wedding forward to October so it'll be a spring wedding.

be brought forward The meeting had to be brought forward by two weeks.

### Slang of the Day

**veep**

Meaning: the vice president

For example:

If a president dies during his or her term, the veep takes over and becomes the president.

What do you think about the Republican Party putting a woman on their ticket to run for veep?

Note: usually used with the definite article "the"

Origin: from sounding the initials "VP"

Variety: This slang is typically used in American English but may be used in other varieties of English too.

## A Life-Saving Cow

Six consecutive days of spring rain had created a raging river running by Nancy Brown's farm. As she tried to herd her cows to higher ground, she slipped and hit her head on a fallen tree trunk. The fall knocked her out for a moment or two. When she came to, Lizzie, one of her oldest and favorite cows, was licking her face. The water was rising. Nancy got up and began walking slowly with Lizzie. The water was now waist high. Nancy's pace got slower and slower. Finally, all she could do was to throw her arm around Lizzie's neck and try to hang on. About 20 minutes later, Lizzie managed to successfully pull herself and Nancy out of the raging water and onto a bit of high land, a small island now in the middle of acres of white water.

Even though it was about noon, the sky was so dark and the rain and lightning so bad that it took rescuers another two hours to discover Nancy. A helicopter lowered a paramedic, who attached Nancy to a life-support hoist. They raised her into the helicopter and took her to the school gym, where the Red Cross had set up an emergency shelter. When the flood subsided two days later, Nancy immediately went back to the "island." Lizzie was gone. She was one of 19 cows that Nancy lost. "I owe my life to her," said Nancy sobbingly.

# ஆங்கில மொழி மூலம் நன்றி தெரிவித்தல்

**Thanks**

**நன்றிக்கு பதிலளித்தல்**

ஆங்கிலத்தில் நன்றி தெரிவித்தலுக்கும், தாழ்மையுடம் மறுமொழி கூறும் வழக்கம் உள்ளது. அவற்றைக் கீழுள்ள எடுத்துக்காட்டுக்கள் ஊடாகப் பாருங்கள்.

Thank you for your kind help.
You're welcome.
Thank you for your gifts
Don't mention it.
Thank you for a great evening
I really enjoyed it.
Thanks for all your help
It's my pleasure.
Thanks for lending me the money
That's all right.

**கவனிக்கவும்:**

இவற்றில் எவ்வாறு எழுதுவது சரி, எவ்வாறு எழுதுவது பிழை, எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவற்றைக் கவனத்தில் கொள்ளவும்.

Thanks - (gpio Thank)
Thank you. - (gpio Thanks you)
Thanks a lot. - (gpio Thank you a lot)
Thank God it's Friday. - (gpio Thanks God ...)
Thank you very much indeed. - (gpio Thank you indeed.)

இங்கே நன்றித் தெரிவிக்கும் சொற்றொடர்கள் 100 வழங்கப்பட்டுள்ளன. விரும்புவோர் பயிற்சி செய்துக்கொள்ளுங்கள்.

Thank you for . . .

English Polite Usage Thanks Aangilam

01. Thank you for accepting our invitation
02. Thank you for accommodating
03. Thank you for acknowledgement
04. Thank you for agreeing
05. Thank you for agreeing to participate
06. Thank you for answering
07. Thank you for applying
08. Thank you for appreciation
09. Thank you for appreciating my work
10. Thank you for appointment letter
11. Thank you for appreciation letter
12. Thank you for arguing
13. Thank you for arguing summary
14. Thank you for arranging the interview
15. Thank you for asking
16. Thank you for assisting
17. Thank you for attending our wedding
18. Thank you for attending seminar
19. Thank you for attending interview
20. Thank you for auditioning
21. Thank you for award speech
22. Thank you for baptism
23. Thank you for barring with me
24. Thank you for being a friend
25. Thank you for birthday wishes
26. Thank you for birthday wishes comments
27. Thank you for blessing me
28. Thank you for booking with us
29. Thank you for bringing to our attention
30. Thank you for business meeting
31. Thank you for buying our product.
32. Thank you for calling me
33. Thank you for celebrating my birthday
34. Thank you for celebrating our wedding
35. Thank you for choosing our hotel
36. Thank you for clicking
37. Thank you for clapping
38. Thank you for clarifying
39. Thank you for clients
40. Thank you for coming to my party
41. Thank you for considering my application
42. Thank you for condolences
43. Thank you for contacting
44. Thank you for coming into my life
45. Thank you for dedication
46. Thank you for dedication and hard work
47. Thank you for defending our country
48. Thank you for dinner party
49. Thank you for dinner invitation
50. Thank you for donation
51. Thank you for downloading our lessons
52. Thank you for donation to charity
53. Thank you for doing business with us
54. Thank you for driving carefully
55. Thank you for everything
56. Thank you for electing me
57. Thank you for employing me
58. Thank you for emailing me
59. Thank you for encouraging me
60. Thank you for enquiry letter
61. Thank you for eulogy
62. Thank you for explaining
63. Thank you for expressing interest
64. Thank you for excellent work
65. Thank you for facilitating
66. Thank you for feedback
67. Thank you for firing me
68. Thank you for flying with us
69. Thank you for forgiving me
70. Thank you for following up
71. Thank you for forwarding my resume
72. Thank you for funeral support
73. Thank you for good service
74. Thank you for greeting me
75. Thank you for great service
76. Thank you for guiding
77. Thank you for helping me
78. Thank you for inviting me
79. Thank you for joining
80. Thank you for job opportunity
81. Thank you for job application
82. Thank you for my birthday present
83. Thank you for not smoking
84. Thank you for new year wishes
85. Thank you for our wedding gift
86. Thank you for offering me the position
87. Thank you for participating in our event
88. Thank you for quotation
89. Thank you for quick response
90. Thank you for registering
91. Thank you for recommendation
92. Thank you for replying
93. Thank you for remembering
94. Thank you for remembering my birthday
95. Thank you for sending your photo
96. Thank you for sending your resume
97. Thank you for teaching English
98. Thank you for understanding
99. Thank you for using our service
100. Thank you for visiting our aangilam.blogspot.com

இவ்வாறு ஒருவரின் செயலை அல்லது செயலுக்கான காரணியைக் குறிப்பிட்டு நன்றி தெரிவிக்கும் வகையில் புதிய புதிய சொற்களைச் சேர்த்து பயிற்சிப் பெறலாம். அவை உங்கள் ஆங்கில அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள உதவுவதுடன், அவசியமானப் பேச்சுப் பழக்கத்திற்கு எளிதாக அமையும். அத்துடன் ஆங்கில சொல்வளத்தை பெற்றுக்கொள்ளவும் உதவும். இவற்றையும் பார்க்கவும்.

ஆங்கிலம் கற்கும் நாம் ஆங்கில மொழியை மட்டுமன்றி, அம்மொழியினரின் பழக்க வழக்கங்களையும் கற்றுத் தெளிவதே, ஆங்கில மொழி ஆளுமை மிக்கவர்களாக எம்மை வளர்த்துக்கொள்ள உதவும். இப்பதிவு ஆங்கில மொழியினரின் பழக்க வழக்கம் சார்ந்த ஓர் கற்கையாகும்.



# கல்வி முரசு

ஆங்கிலம் மூலம் அறிவோம்



# Cheating Hearts

A startling 30% - 60% of married individuals residing in the USA engage in infidelity at some point of their lives according to a study carried out recently. The findings have caused much controversy sparking research into why men and women cheat on their partners.

The most blatant answer from a very Darwinian perspective is that monogamy was never the plan for mankind. Research indicates that only 3%-5% of species in the animal kingdom practice monogamy and only 15% of our ancestral primates are under oath till death does them apart, concluding that by nature humans weren't meant to find their soul mate and live happily ever after.

However the concept of marriage is deeply engrained in society and the next big question is why we cheat. Social researchers have listed out the main reasons for infidelity in accordance to gender:

## Why Men Cheat



70% of men in long term relationships have admitted to cheating on their partners however contrary to popular belief there isn't a striking difference between the numbers of cheating men as against cheating women. To their credit men do edge out their fair skinned counterparts by roughly an extra 10% in the cheating department.


Sexual Dissatisfaction – Well this is hardly a surprise, the naturally high levels of testosterone cause a much stronger compulsion for men to engage in sexual activity when compared to women. The mechanisms of evolution have ensured that there's always a healthy dose of testosterone flowing around and dissatisfaction in this aspect of a relationship is a primary reason for cheating in men.

The Male Ego – Men have a tendency to need confirmation of their self worth every now and then, one of the most important sources of this much needed attention comes from his spouse. If the relationship has grown apart and the partners aren't supportive of each other men may turn to other sources to stroke their egos.

The Smooth Getaway – If a man is given reason to believe that he can get away with cheating on his spouse or if he's gotten away with it easily on previous occasions chances are he will try his luck again. This is common sense and can loosely be deciphered as his partner's fault for not paying sufficient attention.

The Thrill Of The Chase – Most often than not men will stray just to gain a little variety in their sexual endeavors. Even more importantly most men cheating on their partners gain a higher level of excitement through their amorous activities, the reason being the element of danger involved with the act of cheating which escalates the thrill of the chase.

## Why Women Cheat



Women are credited with being experts of emotional cheating but within the contemporary social setting where women are empowered and encouraged to step into a man's shoes the same pitfalls that befell men through the years are slowly descending upon women. In a study carried out by Coffee & Company 50% of women in long term relationships admitted to tangoing with someone other than their spouse.

Stale Relationships – Often known as the exit affair women employ a very strategic routine to end their stale relationships guilt free, they engage in infidelity just so their partners will catch them in the act and would result in the curtain call of the relationship.

Contemptuous Familiarity – One of the most common reasons for women straying from their partners is the general feeling of being taken for granted. Steady relationships often skim through the roses and chocolates stage and end up in a very solid routine of watching tv and sleeping on either corner of the bed. The lack of attention causes women to experience low levels of self worth making them more susceptible to the charms of another man who promises more attention and care.

The End Of The Delusion – The brain activity in newly smitten lovers is much similar to that of cocaine addicts making it safe to assume that we fall in love with what might not exactly be the most accurate description of our partners. As the relationship stands the test of time women tend to notice the irksome habits that they were initially blind to. In essence when a woman realizes her prince is a frog she might kiss other frogs hoping they'll turn into a prince.

Revenge Sex – Hell hath no fury like a woman scorned they say and it turns out the old adage couldn't be more accurate. A woman whose partner has strayed will get back at him by straying herself. Experts suggest that women may even nurse a broken heart by engaging in sexual activity with another man.

In conclusion the bottom line is that cheating occurs almost equally among both genders owing to a variety of reasons. However there are those couples who go their lives without the treacherous games of deception that most of us fall prey to. Commitment, affection and companionship; the key ingredients of a successful relationship could overcome all of the pitfalls that life puts our way. They say 4% of us have the monogamous gene question is do you have it in you?

**By Dilshan Senaratne**

# Her Doll Is Like Her



Sarmini is four years old. She is pretty. She has a doll. It is pretty. Sarmini has blonde hair. The doll has blonde hair. Sarmini has short hair. The doll has long hair. Sarmini gets a pair of scissors. She cuts the doll's long hair. She finishes. Now the doll has short hair too.

# காணிப்பத்திரங்கள் எதுவும் இன்றி 50 வருடங்களாகக் குடியிருக்கும் மக்கள்

(சிகரம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் 90 வருடங்களுக்கு மேலாக மேற்பார்வை செய்து வரும் கள்ளப்புறாவயல், கேணியடி, கல்திட்டி கோவில் வளவு போன்ற இடங்களில் வசித்து வரும் மக்கள் இதுவரை காணி உறுதிப்பத்திரங்கள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் சிதம்பர ஆதீனத்தின் கீழ் இருக்கும் இந்தக் காணி புண்ணிய நாச்சியார் தர்ம ஆதீனத்திற்கு உரியதாகும்.

வயற்காணிகளாகக் காணப்படும் 200 பரப்பிற்கு மேற்பட்ட இந்தக் காணிகளில், 50 வருடங்களிற்கு மேலாக 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். எனினும் இந்த மக்கள் இதுவரை காலமும் தங்கள் காணிகளுக்கான உறுதிகளைப் பெற்றுக்கொள்ளவில்லை.

காணிகளுக்கான அரச உறுதிகள் எதுவும் அற்ற நிலையில் குடியிருக்கும் மக்கள் தாம் குடியிருக்கும் காணியை விற்கவோ ,வேறு ஒருவருக்கு கொடுக்கவோ முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

இந்தக் காணி எங்களுடைய நிர்வாகத்தின் மேற்பார்வையில் இருக்கின்றது. எனினும், இந்தக் காணிகளிலிருந்து எமக்கு எந்தவிதமான வருமானமும் கிடைக்காத நிலையிலேயே காணிகளை விற்பதற்காக நீதிமன்றில் வழக்கு பதிவு செய்தோம்.

இந்தக் காணிகளை, காணியில் இருப்பவர்கள் வாங்க விரும்பினால், நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையினைச் செலுத்திக் காணிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக்காணிகளை வாங்க விரும்புபவர்கள், யாழ்ப்பாணம் நீராவியடியிலுள்ள சைவபரிபாலன சபையில் விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து அந்தக் காணிக்குரிய முழுப்பணத்தினையும் நீதிமன்றத்தில் செலுத்தி தமக்கு உரிய தாக்கலாம் என சைவபரிபாலன சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# கிளி.மலையாளபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

(பிரமிலன்- சிகரம்)

கிளிநொச்சி -மலையாளபுரம் பகுதியில் மீண்டும் ஆரம்ப சுகாதார நிலையம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தினால் மிகவும் மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருந்த இந்த ஆரம்ப சுகாதார நிலையம், என்றிப் (ENREP) திட்டத்தின் கீழ் யுத்தத்தின் பின்னர் மீண்டும் புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்டுள்ள இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் திறந்து வைத்தார்

48 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ள இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம் ஆகிய பிரதேசமக்கள் பயன்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சுகாதாரமற்ற மலசல கூடங்களால் முறிகண்டியில் பிரயாணிகள் பாதிப்பு



(பிரமிலன்- சிகரம்)

யாழ்ப்பாணம் -கொழும்பு போக்குவரத்தின் பிரதான பாதையான A9 பாதையில், பயணத்தில் ஈடுபடும் பயணிகள் கிளிநொச்சி-திருமுருகண்டி ஆலயத்திற்கு அண்மையிலே நிறுத்தப்படும் பொழுது, அங்குள்ள மலசல கூடங்களின் சுகாதார சீர் கேட்டினால் தமக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

இந்தப் பேருந்துகளில் பயணம் செய்யும் பிரயாணிகள் திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள மலசல கூடங்களை தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் பராமரித்து வரப்படும் இந்த மலசல கூடங்களில் போதியளவு நீர் வசதிகள் இல்லை எனவும், மிகவும் அசுத்தமான முறையில் காணப்படுவதாகவும் குறிப்பிடும் பிரயாணிகள், இதனால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய நிலை தோன்றியுள்ளதாகவும், துர்நாற்றம் வீசுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

மலசல கூடப்பாவனைக்காக பிரதேச சபையினால் பயணி ஒருவருக்கு 5 ரூபாவிற்கான பற்றுச் சீட்டு வழங்கப்படுகின்ற போதிலும், மலசலகூடப் பராமரிப்பாளர்கள் பற்றுச் சீட்டினை வழங்காமல் மேலதிகமாக பயணி ஒருவரிடமிருந்து 10 ரூபா அறவிடுவதாகவும் இதனால் தாம் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் பயணி ஒருவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பற்றுச் சீட்டுக்கான பணமான 5 ரூபாவினைப் கொடுக்கும் பயணிகளை 10 ரூபா தரும் வரை மலசல கூடப் பராமரிப்பாளர்கள் தடுத்து நிறுத்துவதாகவும் அந்தப் பயணி சுட்டிக்காட்டினார்.

மலசல கூடப் பராமரிப்பாளர்கள் வழமையாகவே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். பராமரிப்பாளர்களின் இந்தச் செயற்பாடுகளை புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை தங்கள் கவனத்தில் எடுக்க வேண்டுமென திருமுறிகண்டி ஆலயச் சுழலிலுள்ள வர்த்தகர்களும், பயணிகளும் தெரிவிக்கின்றனர்.

# பொலித்தீன் பாவனை அதிகரிப்பு; அழிவின் விளிம்பில் கால்நடைகள்

(பிரமிலன்-சிகரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் பொலித்தீன் பாவனை அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதனால் கால்நடைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகள் தாம் தங்கியிருக்கும் பொது இடங்களிலேயே பொலித்தீன் பைகள் மற்றும் லஞ்சீற் போன்ற பொருட்களைப் போட்டு விட்டுச் செல்கின்றனர்.

மேய்ச்சல் தரைகளில் போடப்படும் இந்தக் கழிவுப் பொருட்களை இந்தக் கால் நடைகள் மேய்வதனால் கால்நடைகளின் தொண்டைப் பகுதியில் இவை சிக்குவதாகவும், இதனால் கால்நடைகளுக்கு நோய் ஏற்படுவதாகவும் குறிப்பிடும் கால் நடை வளாப்பாளர் ஒருவர், கால்நடைகளிற்கு நோயகள் ஏற்படுவதனால் தங்களுடைய பால் வியாபாரம் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார்.



இதேவேளை, சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் கிளிநொச்சியில் மட்டுமன்றி யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலும் பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பாக யாழ். பிரதேச செயலகத்தில் பலமுறை தெரியப்படுத்தியுள்ள போதிலும், அவர்களினால் எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் யாழ். ரெலிக்கோம் நிலையப் பகுதியிலுள்ள வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

எந்த விருட்சமும் தன் வேர்களைக் கட்டுப்படுத்துவதில்லை.
**– ஸென்**

அவன் வனத்தில் நுழையும் போது புற்கள் நசுங்குவதில்லை; நீரில் இறங்குகையில் சிற்றலையும் எழுவதில்லை.
**– ஸென் கவிதை**

இரண்டாவது முறை இறங்குவது அதே நதியில் அல்ல.
**– ஹெராக்ளிடஸ்**

தான் கரையேறாதவன் எப்படி மற்றவர்களைக் கரையேற்றுவான்?
**– மகாபாரத வாக்கு**

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது கேள் மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளுமன்றி வேறில்லை.
**– மணிமேகலை**

புல் நன்றாக விளைந்திருக்கும் போதுதான் பசுமாடும் சாகிறது.
**– ஸ்வீடிஷ் பழமொழி**

வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் பொழுது
**– ஆழ்வார் பாசுரத்தில்**

கருடன் சென்ற நீள் விசும்பில் ஈயும் பறக்கும்.
**– வீரசோழியம்**

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திசை உள்ளது. அவர்கள் அதை நோக்கித் திரும்புகிறார்கள்.
**– குர் ஆன்**

நீ எங்கு சென்றாலும் உன்னையே அழைத்துக் கொண்டு செல்கிறாய்.
**– எமர்சன் (1802–1883)**

உனக்கு நீயே விளக்காவாய்!
**– கௌதம புத்தர்**

நாமெல்லோரும் அனுபவங்களின் கைப்பாவைகள்.
**– அசோகமித்திரன்**

சமய அறிவு இல்லாத விஞ்ஞானம் ஊமை. விஞ்ஞான அறிவு இல்லாத சமயம் நொண்டி.
**– பழமொழி**

உண்மை என்பது காலத்தின் தேவைக்கேற்பத் தகவல்கள் போடும் வேஷம் மட்டுமே.
**– ப்ருனோ**

நமக்குத் தடைகள் அடுத்தடுத்து வந்து கொண்டேயிருக்கிறது என்றால், நாம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்.
**– மெல்வில்**

மூடநம்பிக்கை, பலவீனமான மனம் படைத்தவர்களின் மதம்.
**– எட்மண்ட் பேர்க்**

ஒருவனைக் கோழையாக்குவது மனசாட்சியல்ல; அறிவுதான்.
**– இ.பா.**

வீட்டுக் கூரையின் மேலுள்ள கடிகாரத்தினால் வீட்டுக்காரனுக்குப் பயனில்லை; அண்டை வீட்டுக்காரர்களுக்குத் தான் பயன்.
**– ஒஸ்ரின் ஓ மல்லே**

எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளும் அளவுக்கு நான் இளமையானவன் அல்ல.
**– ஒஸ்கார் வைல்ட்**

தன்னை இந்த உலகம் புரிந்து கொள்ளவேயில்லை என்ற புள்ளியிலிருந்துதான் அநேகமாக ஒவ்வொரு மனிதனின் துக்கமும் பிறக்கிறது.
**– ஆதவன்**

உன் மேலங்கியைக் கொளுவி வைக்க ஒரு கொளுக்கி எங்கோ இருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கும் வரை உன் மேலங்கியை கழற்றாதே.
**– ஒரு சீன அறிஞர்**

உனக்கு ஒன்றும் தெரியாது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க மறக்காதே!
**– ஹக்கிள் பெரிஃபின்**

ஒதுங்கி வாழ்பவர்களெல்லாம் ஒருவகையில் ஒதுக்கப்பட முடியாதவர்கள்.
**– நகுலன்**

வாழ்க்கை மிகவும் சந்தோஷமானது. இறப்பு மிகவும் அமைதியானது. இடையே இருக்கும் மாற்றமே மிகவும் துன்பமானது.
**– விபூதி பூஷண்**

கோபம், வெறுப்பு, கிண்டல் போன்றவற்றை வெளிப்படுத்த எந்தக் கூச்சமும் எழாத போது, அன்பை வெளிப்படுத்த நினைக்கும் போது மட்டும் வெட்கம் பிடுங்கித்தின்கிறது. ஒருவேளை அன்புதான் மிகப்பெரிய மவுனம் போலும்.
**– ஸீரோ டிகிரி நாவலில்**

அவரவர் தலைக்குக் கீழாக மட்டுமே இந்த உலகம் என்று புரிந்து வைத்திருக்கும் மனிதர்கள் பார்வைக்கு வானம் அகப்படாது.
**– அறிவன்**

## தே.மு.தி.க வேட்பாளர் மீது வழக்குப்பதிவு

(புதுக்கோட்டை)

புதுக்கோட்டை இடைத்தேர்தலில் போட்டியிட உள்ள தேமுதிக வேட்பாளர் ஜாகீர் உசேன் மீது தேர்தல் அதிகாரி புகார் கொடுத்த தால் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. வேட்பு மனு தாக்கல் செய்யும் போது ஜாகீர் உசேன் ஏராளமானவர்களுடன் ஜாகீர் உசேன் ஊர்வலம் வந்ததாக அவர் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

புகாரை அடுத்து அவர் மீது கணேஷ் நகர் பொலிஸார் ஜாகீர் உசேன் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர். புதுக்கோட்டை இடைத்தேர்தலில் போட்டி யிட ஜாகீர் உசேன் நேற்றுதான் மனு தாக்கல் செய்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தியச் செய்திகள்

# 18 ஆயிரம் கோடிக்கு மது விற்பனை; தமிழக அரசின் ஓராண்டு சாதனை



(கும்மிடிப்பூண்டி)

தமிழகத்தில் ரூபா 18 ஆயிரம் கோடிக்கு மது விற்பனை செயததுதான் அ.தி.மு.க. அரசின் ஓராண்டுச் சாதனை என்று தேமுதிக தலைவர் விஜயகாந்த் பேசினார். தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், திருவள்ளூர் மாவட்டத்துக்கு சென்று பூண்டி, ஊத்துக்கோட்டை, கும்மிடிப் பூண்டி ஆகிய பகுதி மக்களைச் சந்தித்து கோரிக்கை மனுக் களைப் பெற்றார்.

மின் பற்றாக்குறையால் தமிழகம் இருண்டு விட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் மக்களின் கல்வி, வாழ்க்கைத்தரம் இன்னும் உயரவில்லை. டாஸ்மாக் கடையில் ஆண்டுக்கு ஸீ18 ஆயிரம் கோடி விற்பனையாகி உள்ளது. இதுதான் அதிமுக அரசின் ஓராண்டு சாதனை. படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை.

தமிழகத்துக்கு தண்ணீர் தராத கேரளா, கர்நாடகாவுக்கு லொறிகளில் மணல் கடத்தப் படுகிறது. எங்கள் சொந்தப் பணத்தில்தான் மக்களுக்கு குடிநீர் வசதி, மாற்றுத்திறனாளிக்கு மூன்று சக்கர சைக்கிள் கொடுக்கிறோம்.

மாணவிகளுக்கு இலவச கம்ப்யூட்டர் பயிற்சி கொடுக்கிறோம். மக்களின் வரிப் பணத்தை செலவு செய்ய விலலை என அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதி நெருக்கடியில் மத்திய அரசு; செலவுகளைக் குறைக்க உத்தரவு

(புதுடில்லி)

கடும் நிதி நெருக்கடியில் மத்திய அரசு தள்ளாடுவதைத் தொடர்ந்து, அதிரடியான சிக்கன நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்த, அரசு முடிவு செய்துள் ளது.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் சொகுசு பயணங்களுக் கும், ஐந்து நட்சத்திர விடுதி களில் மாநாடு, கருத்தரங்கு கள் நடத்துவதற்கும், தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில், கச்சா எண்ணெயின் விலை கடுமை யாக அதிகரித்துள்ளதை அடுத்து, அரசு கடும் நிதி நெருக் கடியில் சிக்கியுள்ளது. குறைவான பொருளாதார் வளர்ச்சி, மானியச் சுமை அதிகரிப்பு போன்றவையும், மத்திய அரசின் நிதிச் சிக்கலை அதிகரித்துள்ளன. நாட்டின் நிதிப்பற்றாக் குறை, 2011-12 நிதியாண்டில் 5.9 சத வீதமாக அதிகரித்துள்ளது.

இதை 5.1 சதவீதமாக குறைக்க, அரசு சார்பில் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மானியச் செலவு களை குறைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவில், நடப்பு நிதி யாண்டில் மானியச் செலவு



களை இரண்டு சதவீதமாகவும், அடுத்த நிதியாண்டில், 1.75 சதவீதமாக குறைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் எரி பொருளுக்கான மானியமாக, 65 ஆயிரம் கோடி ரூபாயை, அரசு வழங்கியது. நடப்பு நிதியாண் டில், இதை 40 ஆயிரம் கோடி ரூபாவாக குறைக்கவும், அரசு முடிவு செய்துள்ளது. நிதிப் பிரச்சினையில் மத்திய அரசு தள்ளாடுவதைத் தொடர்ந்து, இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், கடுமை யான முடிவுகளை கையாளப் போவதாக, மத்திய நிதி அமைச சர் பிரணாப் முகர்ஜி, ஏற் கனவே நாடாளுமன்றில் தெரி வித்திருந்த நிலையில், அரசின் சிக்கன நடவடிக்கைகளை விரைவில் நடைமுறைப்படுத்த அரசு முடிவெடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.


# யானை வழங்க அம்பானி விருப்பம்

(புதுக்கோட்டை)



திருப்பதி கோவிலுக்கு நான்கு யானைகளை வழங்க இந்தியாவின் பணக்காரக் குடும்பமான அம்மானி குடும்பம் விரும்புகிறது. கோவிலில் நேற்று முன்தினம் சாமி தரிசனம் செய்த பின்னர் யானைகளை கோவிலுக்கு வழங்குவது தொடர்பான தகவல்களை, தேவஸ்தான அதிகாரிகளை சந்தித்து ஆலோசனை கேட்டறிந்தார்.

அப்போது,வெளிநாடுகளிலிருந்து நான்கு யானைகளை வாங்கி வந்து, வெங்கடேச பெருமாளின் சேவைக்கு வழங்கும் எண்ணம் உள்ளது என்ற தனது விருப் பத்தை, தேவஸ்தான அதிகாரிகளிடம் தெரிவித்தார். யானை-களை நன்கொடையாக பெற்றுக் கொள்ள, எந்தவித தடையும் இல்லை என அதிகாரிகள் அனந்த் அம்பானியிடம் தெரி வித்தனர். பெங்களூரில் நடந்த ஐ.பி.எல். கிரிக்கெட் விளை யாட்டில் மும்பை இந்தி யன்ஸ் அணி வெற்றி பெற்றதை யொட்டி, வெங்கடேசப் பெரு மாளுக்கு பிரார்த்தனை செலுத்தி தரிசனம் செய்ய குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து, திருமலை கோவிலுக்கு வநத தாக அவர் குறிப்பிட்டார்.




# உளவுத்துறை விசாரணையால் நித்தியானந்தாவின் சீடர்கள் பீதி

(ஓசூர்) .

தமிழகம் முழுவதும் உள்ள நித்யானந்தா தியான பீடங்களில், உளவுத்துறை பொலிஸார், இரகசிய விசாரணை மேற்கொண்டுள்ளதால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம், பிடதி ஆசிரமத்தை தலைமையிட



மாகக் கொண்டு, நித்யானந்தாவுக்கு, நாடு முழுவதும் மட்டுமில்லாது, உலக நாடுகளிலும் ஏராளமான தியான பீடங்கள், ஆசிரமங்கள் உள்ளன.

நடிகை ரஞ்சிதாவுடன் இணைத்து கூறப்பட்ட விவகாரத்தில், அனைத்து தியான பீடங்கள் மீதும் தாக்குதல் சம்பவங்கள் நடந்ததால், தியான பீடங்களுக்கு சீடர்கள் வருகை குறைந்தது.

பல தியான பீடங்கள், தாக்குதல் பீதியால் பூட்டப் பட்டன. ரஞ்சிதா விவகாரம் அடங்கிய பின், தியான பீடங்கள், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. தற்போது, நித்யானந்தா, மதுரை ஆதீனமாக பொறுப் பேற்றதால், மீண்டும் அவரைச் சுற்றி பல்வேறு சர்ச்சைகள் ஏற்படத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள நித்யானந்தா தியான பீடங்களில், தமிழக உளவுத் துறை பொலிஸார் மூலம் இரகசிய விசாரணை மேற் கொண்டு, முக்கிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க உத் தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, உளவுத்துறை பொலிஸார், தமிழகம் முழுவதும் உள்ள தியான பீடங்களில், இரகசிய விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது, தியான பொறுப் பாளர்களிடம் விசாரணை நடத் திய உளவுத்துறை பொலிஸார், பீடத்துக்கு வரும் நித்யானந்தா சீடர்களின் எண்ணிக்கை, அவர்கள் எந்தந்த இடங்களில் இருந்து வருகின்றனர், தியான பீடம் தொடங்கி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன, தியான பீட நிர்வாகிகளின் குடும்பப் பின் னணி ஆகிய புள்ளி விபரங் களை சேகரித்து சென்றுள்ள னர்.

இதுகுறித்து மாவட்ட பொலிஸ் அதிகாரிகளிடம் கேட்டபோது, அவர்கள் கருத்து தெரிவிக்க மறுத்ததோடு, விசா ரணை எதுவும் நடக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

## அனல் காற்றால் பொதுமக்கள் அவதி



(ஓசூர்)

தமிழ்நாட்டில் மற்ற நகரங் களைவிட வேலூரில் எப் போதும் வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருக்கின்றது. இதை மெய்ப்பிக்கும் வகையில் வேலூர் மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் 100 பாகைக்கு மேல் வெயில் சுட்டெரித்து வருகிறது.

மார்ச் மாதம் 17 ஆம் திகதி 108.3 பாகை வெயில் கொளுத்தியது. இந்த ஆண்டு அக்னியின் போது வழக்கமான அளவை விட வெயில் அதிக மாக இருக்கும் என வேலூர் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

ஆனால் ஏப்ரல் கடைசி வாரத்தில் வேலூர் மாவட்டத் தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக கோடைமழை பெய் தது. இதனால் வெயிலின் தாக்கம் சற்று குறைவாக இருந்துள்ளது.

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

சு.கிருஷ்ணிகா
சுரேந்திரா ஸ்ரோர்ஸ்
வற்றாப்பளை,
முள்ளியவளை.




சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் .............................. பெற்றோர் கையொப்பம்

அகவை 2 இல்...

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஈரான் மீது போர் தொடுப்போம்; அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை



அணு ஆயுதத் தயாரிப்பை நிறுத்திக் கொள்வதாக ஈரான் உறுதி அளிக்கவில்லை என்றால், ஈரான் மீது போர் தொடுப்போம் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதர் டேனியல்ஷாப்பிரோ கூறுகையில், இராணுவத் தாக்குதல் நடத்தாமல் வேறு சில கெடுபிடிகள் மூலமாகவே ஈரானை பணிய வைக்க முடியும். ஆனால் அவ்வாறு ஈரான் பணியவில்லை என்றால் ஈரானை தாக்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளன என்றார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாஹீ தனியாக ஈரான் மீது போர் தொடுக்கலாம் அதற்கு வேண்டிய அனைத்து ஆயுத உதவிகளையும் அமெரிக்கா செய்யும் என ஒபாமா உறுதி அளித்துள்ளார்.

அடுத்த வாரம் நடக்கவிருக்கும் கூட்டம்தான் ஈரானுக்கு அளிக்கப்படும் கடைசி வாய்ப்பு என்று அமெரிக்கா கருதுகிறது. அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பனேட்டா அமெரிக்காவின் திட்டங்கள் குறித்து விளக்கினார்.

இந்த ஆண்டு அமெரிக்கா இஸ்ரேலுக்கு 70 மில்லியன் டொலர் மதிப்பில் ஏவுகணை உதவி அளிக்கத் திட்டமிட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் 205 மில்லியன் டொலருக்கு ஆயுத உதவி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# நடுவானில் தகராறு



பாகிஸ்தானில் நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் உள்ள விமானிகளுடன் தகராறில் ஈடுபட்டதாக, அந்நாட்டு பிரதமர் மகன் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் நேற்று முன்தினம் லாகூர் நகரில் இருந்து கராச்சி நோக்கி சென்று கொண்டிருந்தது.

இதில் பயணிப்பதற்காக தனது பாதுகாவலருடன் வந்த பிரதமர் யுசுப் ராஸா கிலானியின் மகன் அலி மூசா, நடுவானில் பறந்து கொண்டிருந்த போது, தனக்கு உயர்வகுப்பு சொகுசு கட்டண இருக்கையினையும், பாதுகாவலருக்கு வர்த்தகர்களுக்கான கட்டண வகுப்பு இருக்கையும் ஒதுக்கப்பட்டிருந்தை அறிந்து விமான விமானிகள் மற்றும் விமானப் பணியாளர்களிடம் தகராறு செய்து விமானத்தை மீண்டும் லாகூருக்கு செல்லுமாறு கூறி ரகளையில் ஈடுபட்டார்.

உடன் சிலர் அவரை சமரசப்படுத்தினர். பின்னர் ஒரு வழியாக சமாதானம் அடைந்த அலி மூசா, கராச்சி விமானநிலையத்திற்கு விமானம் இறங்கியவுடன் அங்கிருந்து புறப்பட்டு சென்றார். இந்த சம்பவம் விமான நிலைய அதிகாரிகளை கலக்கமடைய செய்துள்ளது.

# வெள்ளை இனத்தவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் சடுதியாக வீழ்ச்சி

அமெரிக்காவில் வெள்ளை இனத்தவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகின்றது. இதற்கு பொருளாதார வீழ்ச்சியே காரணம் என சமூகவியல் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் சிறுபான்மை இனத்தவரான ஸ்பெயின் மற்றும போர்த்துக்கீசிய மொழி இனம் சார்ந்த ஹிஸ்பேனியரிடம் குழந்தை பிறப்பு குறைந்து வருவதால், அவர்கள் தமது சிறுபான்மை அந்தஸ்தை இழந்து வருகின்றனர்.

வெள்ளை இனத்தவரான இந்த ஹிஸ்பேனிய இனத்தவரின குழந்தை பிறப்பு விகிதம் 2008 ஆம் ஆண்டு முதல் குறைந்து கொண்டே வருகின்றது என்று நியூ ஹேம்ப்ஷயர் பல்கலைகழகத்தின் கென்னத் ஜான்சன் தெரிவித்தார்.

புருக்கிங்ஸ் நிறுவனத்தின் வில்லியம் பிரே இதுகுறித்து கூறுகையில், இனிவரும் காலங்களில் வெள்ளையர்களின் உழைக்கும் வர்க்கத்தினர் குறைந்து போவார்கள். உழைப்புக்காக ஆபிரிக்க மக்களையும், ஆசிய மக்களையும் எதிர்பார்க்கும் சூழ்நிலை உருவாகும் என்றார்.

இதுமட்டுமல்லாமல் இளைஞரகளின் எண்ணிக்கை வெள்ளை இனத்தில் குறைந்து கொண்டே போகிறது. அமெரிக்காவில் 65 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 1.1 மில்லியனிலிருந்து 4.4 மில்லியன் வரை உயர்ந்து விட்டது. 85 வயதுக்கும் அதிக



மானோர் 5.7 மில்லியனாவர்.

தற்போது அமெரிக்காவின் சிறுபான்மை இனத்தவர்கள் 36.6 சதவிகிதம் ஆவார். எனவே இரண்டாம் இடத்தில் இருந்த ஆபிரிக்கஅமெரிக்க மக்கள் முதலிடத்தை பெற்றுள்ளனர்.

# கர்ப்பகாலத்தில் உணவுக் கட்டுப்பாடு பாதிப்புக்களை ஏற்படுத்தாது – ஆய்வில் தகவல்



கர்ப்பகாலத்தில் உணவுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்வதால், கருவில் உள்ள குழந்தைக்கு பாதிப்பு ஏற்படாது என்று ஐரோப்பியாவை சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

7000 கர்ப்பிணிப் பெண்களை கொண்டு நடத்தப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

எவ்வாறெனினும் கடந்த 2010ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், கர்ப்பக்காலத்தில் உணவுக் கட்டுப்பாட்டினை மேற் கொள்வது, குழந்தைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அதற்கு சாத்தியம் இல்லை என புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், கருத்தரிப்பதற்கு முன்னர் வயதுக்கு உரிய எடையை பெண்கள் அடைந்திருப்பது மிகவும் முக்கியமானது எனவும் மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

# சிக்காக்கோ நகரில் ஆர்ப்பாட்டம்



நேட்டோ மாநாடு நடைபெறவுள்ள அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அநேகமானவர்கள் பொருளாதார விடயங்கள் குறித்து கோஷமிட்டுள்ளதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்ட சுமார் 60 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ள மாநாடு இன்று நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆர்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் யுத்தம் மற்றும் சர்வதேச பாதுகாப்பு குறித்து இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது.

மாநாட்டின் பாதுகாப்புக்கென ஆயிரக்கணக்கான பாதுகாப்பு தரப்பினர் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், குறிப்பிடத்தக்க பயங்கரவாத் தாக்குதல் அச்சுறுத்தல்கள் இல்லை என அமெரிக்க புலனாய்வு அமைப்பான ஏப்.பி.ஐ தெரிவித்துள்ளது.

# இறந்தது பறவையா? இஸ்ரேலின் உளவாளியா?



துருக்கி நாட்டின் கிராமப்புறத்தில் ஈப்பிடிப்பான் வகையைச் சேர்ந்த ஒரு பறவை இறந்து கிடந்தது. இதன் காலின் அடிப்பகுதியில் இஸ்ரேல் என்று எழுதப்பட்ட வளையம் இருந்தது.

அதன் மூக்கு துவாரங்கள் வழமையை விட மிகப் பெரியதாக இருந்தன. அழகிய வண்ண நிறச் சிறகுகள் கொண்ட இந்த பறவை இறந்து கிடந்தது யாருக்கும் பரிதாபத்தை ஏற்படுத்தவில்லை.

மாறாக அதன் மூக்கு துவாரத்தில் மைக்ரோசிப் அல்லது கருவி ஏதேனும் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறதோ என்று அச்சம் தான் ஏற்பட்டது.


இதன் பின்பு பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து பொதுமக்களின் சந்தேகத்தை தீர்த்து வைத்தனர்.

பிற இடங்களுக்கு செல்லும் பறவைகளுக்கு காலில் வளையம் மாட்டுவது இயல்பு என்றும், அப்போது தான் அது போகும் பாதையை அறிந்து கொள்ள அறிவியல் நிபுணர்களால் இயலும் என்றும் பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து இஸ்ரேலுடன் தொடர்பு கொண்டதில் அங்குள்ள இயற்கை பாதுகாப்பு கழகம் இந்த பறவையின் வரிசை எண்ணை உறுதி செய்தது.

இஸ்ரேலின் வடக்கு முனையிலிருந்து இந்தப் பறவைகள் தென்கிழக்காகப் பறந்து துருக்கி நாட்டை வந்தடைகின்றன என்பதும் தெரியவந்தது.

# சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம் செய்யும் தனியார் ரொக்கெட்



அமெரிக்காவில் ஜனாதிபதி ஒபாமா நிர்வாகம் தனியார் நிறுவன தயாரிப்பு ரொக்கெட்டுகளை சர்வதேச விண்வெளிக்கு செலுத்த அனுமதியளித்து வருகின்றது.

அந்த வகையில் கலிபோர்னியாவைச் சேர்ந்த 'ஸ்பேஸ்-எக்ஸ்' என்ற நிறுவனம் தயாரித்துள்ள 'போ.'.ல்கன்-9' என்ற ரொக்கெட் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு முதன்முறையாக செலுத்தப்பட உள்ளது. இந்த ரொக்கெட் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கேப்கேனவரல் விமானப்படைத் தளத்தில் நேற்று முன்தினம் நிலை நிறுத்தப்பட்டது.100 பில்லியன் டொலர்கள் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த 'போ.'.ல்கன்-9' ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. காலநிலை மற்றும் சீதோஷ நிலையும் சாதகமாக இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளதை தொடர்ந்து, இதற்கான கவுண்டவுன்கள் தொடங்கிவிட்டன. வரும் 22ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை)சர்வதேச விண்வெளி நிலையத்தை இந்த ரொக்கெட் சென்றடையும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு ஜப்பான் அரசாங்கம் அறிவிப்பு

ஜப்பானிய மக்கள் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று அந்த நாட்டு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் மின்சாரப் பாவனையை 15 வீதத்தால் கட்டுப்படுத்தும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் இந்தக் கோரிக்கையை அரசாங்கம் விடுத்துள்ளது.

ஜுலை தொடக்கம் செப்டெம்பர் மாத காலப்பகுதிக்குள் இந்த திட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பானில் பெருமளவான அணு உலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், மின்சார உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. அணு உலைகளைப் பயன்படுத்தியே ஜப்பா னின் பெருமளவான மின்சார உற்பத்தி இடம்பெறு கின்றமை குறிப்பிடத்தக்கது. 30 வீதத்துக்கும் அதிக மான மின்சார உற்பத்தி அணுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் புகுசிமா அணு உலை விபத்தினால், ஜப்பானில் அணு உலைகள் பல மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கணினி உலா

A.J.Nimalrajan

## USB க்கு குரல் மூலம் கடவுச் சொல்




கடவுச்சொற்கள் இதுவரை காலமும் எழுத்துக்கள், விசேட குறியீடுகள், இலக்கங்கள் என்பனவற்றின் அடிப்படையில் அமைந்தவையாகக் காணப்பட்டன.

எனினும் தற்போது குரல் பதிவு மூலம் கடவுச்சொற்களை உருவாக்கி பாதுகாக்கும் தொழில்நுட்பத்துடன்கூடிய USB drivநகள் அறிமுகமாகின்றன.

தற்போது 8GB அளவுடைய கோப்புக்களை சேமிக்கக்கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ள USB driveகள் விண்டோஸ், அப்பிளின் mac இயங்குதளங்களில் பயன்படுத்தக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளன. விலை 50 அமெரிக்க டொலர்கள்.

## உங்கள் Folder க்கு Password



Password இட்டு பாதுகாப்பாக வைத்திருப்பது எப்படி என்று பார்க்கலாம்.

Step 1 : புதிய folder ஒன்றினை உருவாக்குங்கள் (Right-click -->> New Folder) அதற்கு விரும்பிய பெயரிடுங்கள்.

Step 2 : பாதுகாப்பாக வைக்க வேண்டிய File களை அந்த Folder இல் இடுங்கள்.

Step 3 : நீங்கள் உருவாக்கிய Folder இல் Right Click செய்து Send To -->> Compressed (zipped) Folder இனை தெரிவு செய்யுங்கள்.

Step 4 : இப்போது அதே இடத்தில் Compressed (zipped) Folder உருவாகி இருக்கும்.

Step 5 : Zipped Folder இனை Open செய்யுங்கள் அதனுள் நீங்கள் உருவாக்கிய Folder இருக்கும்.

Step 5 : File Menu இல் Add a Password இனை தெரிவு செய்து உங்களுக்கு தேவையான Password இனை இடுங்கள்.

உங்களுக்கு இது இன்னும் பாதுகாப்பானதாக இல்லாவிடில் Compressed (zipped) Folder இனை Hidden File ஆக்கலாம்.

## ஆண்களுக்கு ஓர் எச்சரிக்கை



லப்டொப்களின் வை-பை மூலம் இணையதளம் உபயோகிக்கும் ஆண்களுக்கு ஆண்மைக் குறைபாடு ஏற்படும் என்று சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

முக்கியமாக லப்டொப்களை மடியில் வைத்து உபயோகிக்கும் ஆண்களுக்கு விந்தணு உற்பத்தி குறைபாடு ஏற்பட்டதும் கண்டறியப்பட்டுள்ளது. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் செல்போன், லப்டொப் போன்ற மின்னணு இயந்திரங்களின் வருகை அதிகரித்து கொண்டே செல்கிறது. எங்கும், எப்போதும் எப்படி வேண்டுமானாலும் உபயோகிக்கலாம் என்பதால் லப்டொப் உபயோகிப்போர் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருகிறது.

மடிக்கணினி என்ற பெயருக்கு ஏற்ப இதனை ஏராளமானோர் மடியில் வைத்தே உபயோகிக்கின்றனர். இவ்வாறு மடிக்கணினியை மடியில் வைத்து உபயோகிப்பது ஆண்களுக்கு எண்ணற்ற விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. எனவே மடிக்கணினிகளை உபயோகிக்கும் போது வை-பை இணையதளத்தையும் வைத்து உபயோகிக்கின்றனர். இதனால் எழும் மின்காந்த கதிர்வீச்சினால் ஆண்களின் விந்தணு பாதிக்கப்படும் என்றும் தெரியவந்தது.

இது குறித்து 29 ஆண்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அப்போது வை-பை இல்லாமல் மடிக்கணினியை உபயோகித்த ஆண்களை பரிசோதனை செய்தபோது அவர்களின் விந்தணுக்களுக்கு பெரிதாக பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரியவந்தது. அதேசமயம் லேப்டாப்பில் வை-பையை இணைத்து உபயோகித்தவர்களின் விந்தணு பாதிப்பிற்குள்ளானது ஆய்வில் தெரியவந்தது. இதற்குக் காரணம் வை-பையில் இருந்து எழும் மின்காந்த கதிர்வீச்சுதான் என்று தெரியவந்தது. இந்த கதிர்வீச்சினால் விந்தணுவின் டி.என்.ஏ பாதிக்கப்படுவதுடன் அதன் வீரியம் குறைவதாகவும் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

## அறிந்து கொள்ள

* மைக்ரோசொப்ட் நிறுவனம் 1983இல் தன்னுடைய முதல் மவுஸை வடிவமைத்தது. முதலில் தயாரித்த ஒரு இலட்சம் மவுஸ்களில், 5,000 மட்டுமே விற்பனையானது. ஓராண்டுக்குப் பின் மக் இன்டோஷ் கம்ப்யூட்டர் வந்த பின்னரே, மக்கள் மவுஸின் தகவல் உள்ளிடும் திறனை அறிந்து அதிக அளவில் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

* இணையத்தைப் பயன்படுத்துபவர்களில், குறைந்தது 86.6% பேர் வாரத்தில் ஆறு மணி நேரம் இணையத்தில் உலா வருகிறார்கள்.

* புளூடுத் தொழில் நுட்பத்திற்கு அந்தப் பெயர வந்ததன் காரணம் தெரியுமா? அது டென்மார்க் நாட்டின் மன்னர் ஒருவரின் பெயர். ஹெரால்ட் புளூடுத் என்ற அந்த மன்னர், தன் நாட்டில் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்த பல் வேறு ஆதிவாசி குழுக்களை ஒன்றிணைத்து, இணக்கமாக வாழ வழி செய்தார். அதற்கான நன்றிக் கடனாக, புளூடுத் தொழில் நுட்பம் கண்டறிந்த விஞ்ஞானிகள் அவரின் பெயரை, அத் தொழில் நுட்பத்திற்குப் பெயரிட்டனர்.

* ட்ரைவ் அசிஸ்ட் என்ற சொப்ட்வேர் தொகுப்பினை, கனடா நாட்டைச் சேர்ந்த ஏஜிஸ மொபிலிட்டி என்ற நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தினால், நாம் மொபைல் போனில் அழைக்கும் ஒருவர், வாகனம் எதனையேனும் ஓட்டிக் கொண்டிருந்தால், அழைப்பவருக்கு எச்சரிக்கை கொடுக்கும். ஆனால் அழைப்பதற்கான காரணம் மிக மிக முக்கியமானதாக இருந்தால், இந்த எச்சரிக்கையை அலட்சியப்படுத்தி, அழைப்பை உண்டாக்கலாம். அல்லது மெசேஜ் கொடுப்பதற்கும் இந்த சொப்ட்வேர் வழி தருகிறது. அத்துடன் அழைப்பவர், அழைக்கப்படும் நபர் எங்கிருக்கிறார் எனவும் இந்த சொப்ட்வேர் மூலம் அறிந்து கொள்ளலாம்.



## உங்கள் கோப்புகளில் வைரஸா?




உங்கள் கணினியில் ஏற்படும் வைரஸ் தாக்கத்தால் சிலவேளைகளில் கணினியில் உள்ள கோப்புக்கள் மறைக்கப்பட்டிருக்கும். இவற்றை Folder Options சென்று "Show hidden Folders" என்பதைத் தெரிவுசெய்தே மீளப் பார்க்கலாம். இதில் சிலவேளை "Show hidden Folders" என்பதைத் தெரிவுசெய்தாலும் வைரஸ் தாக்கம் காரணமாக தன்னிச்சையாகவே மீண்டும் மீண்டும் ஆவணங்கள் மறைக்கப்பட்டு விடும். இதனால் அவற்றை எப்படிப் பார்ப்பதென்று நீங்கள் எண்ணலாம். இதற்கு முதலில் Start Button இனுள் சென்று "RUN" என்பதை கிளிக் செய்து அதனை திறந்துகொள்ளுங்கள்.


பின்னர் கீழ் காட்டிய ஒழுங்கில் சென்று SHOWALL என்பதை அடையவும்.

HKEY_LOCAL_MACHINE\SOFTWARE\Microsoft\Windows\Curr entVersion\Explorer\Advanced\ Folder\ Hidden\ SHOWALL

இப்போ வலப்பக்கத்திலே உள்ள CheckedValue என்பதை Double-Click செய்து திறந்து கொள்ளவும்.

இதிலே "Value data" இல் "1" என்றுள்ளதற்குப் பதிலாக 2 ஐக் கொடுத்து OK பண்ணவும். இப்போ மறைக்கப் பட்ட கோப்புக்கள் மீளத் தென்படும்.




## விண்டோஸ் 8 அதிகாரபூர்வ தகவல்




மைக்ரோசொப்ட் நிறுவனம் தான் பெருமையுடன் அடுத்து அறிமுகப்படுத்த இருக்கும் விண்டோஸ் 8 இயங்கு தளம் குறித்த முதல் அதிகாரபூர்வ தகவலை வெளியிட்டுள்ளது.

முதலில் இயங்கு தளம் சார்ந்து புரோகிராம் வடிவமைப்பவர்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நுகர்வோருக்கான சோதனைப் பதிப்பு வெளியானது. தற்போது இதன் பெயர் மற்றும் பதிப்புகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இயங்கு தளம் ஒன்றின் பல்வேறு வகை பதிப்புகளை வெளியிடுவது மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் வழக்கம். விண்டோஸ் 8 அதிகமான நுகர்வோர் விரும்பித் தேர்ந்தெடுக்கும் வகையில் இருக்கும். இது விண்டோஸ் 7 ஹோம் பிரிமியம் பதிப்பின் இடத்தில் இடம் பெறும். இதில் மேம்படுத்தப்பட்ட விண்டோஸ் எக்ஸ்புளோரர், கூடுதலான மொனிடர்களைப் பயன்படுத்தும் வசதி ஆகிய்வை இதில் இருக்கும்.

மேலும் மொழிகளுக்கிடையே மாற்றிக் கொள்வது இந்த இயங்கு தளத்தில் மிகவும் எளிதாகவும் வேகமாகவும் இருக்கும். இந்த வசதி முன்பு அதிகப் பணம் செலுத்தி வாங்கக் கூடிய இயங்கு தளத்தில் மட்டுமே தரப்பட்டது.

விண்டோஸ் 8 ப்ரோ சிஸ்டம் வர்த்தக, தொழில்நுட்ப வல்லுநர்களுக்கானது. இதில் சுருக்கிய போர்மட்டில் அமைக்க BitLocker என்கிரிபஷன் வசதி, கணிப்பொறி இயக்கத்தினை அமைத்துச் சரி பார்க்கும் வசதி, விசுவல் ஹார்ட் டிஸ்க்கிலிருந்து டிழழவ செய்திடக் கூடிய வசதி, தனிப்பட்ட கணினி வடிவமைப்பு மற்றும் செயல்முறை நிர்வாகம், விண்டோஸ் இணைய தள இணைப்பு ஆகியவை கிடைக்கும்.

# இலங்கை வங்கி வாடிக்கையாளர்கள் 289 பேருக்கு 43 இலட்சம் பரிசளிப்பு



வடமாகாணத்தின் இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கான ''மெகாவாகியின்'' முதலாம் காலாண்டு பரிசுச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற 289 அதிஷ்டசாலிகளுக்கான பரிசளிப்பு நேற்று முன்தினம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

இப்பரிசளிப்பு நிகழ்வில், சீட்டிழுப்பில் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 43 இலட்சம் ரூபா பெறுமதியான பரிசில்கள் வங்கியினால் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பொதிகள், மடிக் கணினிகள், வீட்ட உபகரணப் பொதிகள் என்பன இந்தப் பரிசுத் தொகையில் அடங்கியுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிய பரிசில் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா சிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.

இலங்கை வங்கியின் வடக்கு வலய உதவிப் பொது முகாமையாளர் சுமணசிறி இந்நிகழ்வில் கலந்து கொண்டு வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசில்களை வங்கியின் வடக்கு வலய உதவிப் பொது முகாமையாளர் சுமணசிறி, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் வழங்கி வைத்தனர்.

மேலும் இந்நிகழ்வில், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்புரையொன்றையும் வழங்கினார்.

வன்னிப் பகுதியில் இருந்தும் பெருமளவு வாடிக்கையாளர்கள் இந்தத் திட்டத்தில் பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# கிங்ஸ் லெவன் பஞ்சாபை வீழ்த்தியது டில்லி டெவில்ஸ்



(டில்லி)

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிரான போட்டியில் டில்லி டெயார் டெவில்ஸ் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் 69ஆவது போட்டி நேற்று டில்லியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அசார் மொகமட் 36, சிற்னிஸ் 38 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மோர்கல் நான்கு, உமேஷ் யாதவ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டில்லி டெயார் டெவில்ஸ் அணி 18.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டேவிட் வோனர் 79 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அசார் மொகமட் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்ட நாயகனாக உமேஷ் யாதவ் தெரிவானார்.

## பரிந்துரைகளின்...

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் இலங்கைக்குள்ளும், சர்வதேச ரீதியிலும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளை விரைவாகவும், வெளிப்படையாகவும் மேற்கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

இத்தகைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான உறுதியான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை உங்கள் மக்களுக்கும், உலகுக்கும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் தற்போதுள்ளது.

வடபகுதியில் நிலைகொண்டுள்ள படைத்தரப்பினரின் எண்ணிக்கையைக் குறைப்பது, வடமாகாண சபைக்கான தேர்தல், மனித வுரிமைகள் மற்றும் பாதுகாப்பு, ஊடக சுதந்திரம் உள்ளிட்ட பொதுவான சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவம் குறித்தும் அவர் மீண்டும் அழுத்திக் கூறினார்.

அதேவேளை, ஈரானிடம் இருந்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதைக் குறைப்பது தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் இருவரும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர் என விக்டோரியா நூலண்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஹிலாரி கிளின்டனும், பீரிஸும் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றினார்கள்.

இதன்போது வெளிவிவகார அமைச்சரை வரவேற்றுப் பேசிய ஹிலாரி கிளின்டன், இலங்கையில் இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த போர் முடிவுக்கு வந்ததை அடுத்து, அந்நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்வதற்கு அமெரிக்கா ஊக்கமளிக்கும் எனவும், இந்நடவடிக்கைகளின் போது அமெரிக்காவும் பங்காளியாக இருக்க விரும்புவதாகவும் அவர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவரின் உரையை அடுத்து உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வைக் காண்பது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வலியுறுத்தினார்.

சுமார் 10 நிமிடங்கள் இடம்பெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பை அடுத்து, இவர்கள் இருவரும் மூடப்பட்ட அறைக்குள் சந்தித்து சுமார் 35 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

## செயற்திட்ட...

செயலரிடம் விரிவான நல்லிணக்கத் திட்டத்தை அரசாங்கம் வழங்கியுள்ளது.

போரின் போது அரசபடைகளால் இழைக்கப்பட்ட மீறல்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கமே விசாரணைகளை மேற்கொள்ளும்.

போரின் இறுதி சில மாதங்களில் இடம்பெற்ற போர்க்கால மீறல்கள், மனிதஉரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை சட்டமா அதிபர் ஆரம்பித்துள்ளார்.

உள்ளூர் விசாரணைகள் இப்போது தான் ஆரம்பமாகியுள்ளன.

இந்த விசாரணைகள் ஒரு முடிவை எட்டும் வகையில், முன்னேறுவதற்கு நியாயமான வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும்.

அதைச் செய்யும் வரை எந்தவொரு வழியிலுமான தலையீடும், அனைத்துலக விசாரணையும் முதிர்ச்சியற்றது.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளும் கூட விசாரிக்கப்படுகின்றன.

போர் முடிவுக்கு வந்த பின்னர், அனைத்துலக சமூகத்தின் கரிசனைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அமெரிக்க அதிகாரிகளுக்கு, எமது குழு விரிவான முறையில் விளக்கமளித்துள்ளது.

எவ்வாறாயினும் எந்த ஆவணமும் ஒப்படைக்கப்படவில்லை.

செயற்திட்டம் தொடர்பான எந்த ஆவணத்தையும் நாம் அவர்களிடம் கையளிக்க வில்லை.

ஆனால் நாம் என்ன செய் தோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது குறித்தும், எதிர்காலப் பயணம் குறித்தும் அவர்களுக்கு விரிவாக விளக்கியுள்ளோம் என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தேசிய...

தேர்தல்கள் செயலகத்துடன் அரசியல் கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சகல ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழருடன்...

நல்லிணக்கம் நாட்டில் உருவாக வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அரசாங்கத் தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எம்மால் காண முடியவில்லை. சிங்கள மக்களின் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக சரத் பொன்சேகாவை அரசாங்கம் நிபந்தனையின்றி விடுதலை செய்யப் போகின்றது. தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஏன் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கூடாது. அதை விடுத்து தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பேசுவதால் எதுவும் நடைபெறப்போவதில்லை.

எனவே, அரசாங்கம் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏழாலைப் பகுதியில்...

இரத்தினம் வனிகலா (வயது-30) என்ற பெண்ணே காணாமல் போனவராவார்.

இச்சம்பவம் குறித்து தாயார் தெரிவித்ததாவது,

மயிலணியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் குறித்த பெண்ணைக் காதலித்து திருமணம் செய்யாது ஏமாற்றியிருந்தார். இந்த நிலையில் குறித்த இளைஞனுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சியாக நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் குறித்த இளைஞன் அப்பெண்ணுக்கு தாபரிப்பு பணமாக மாதாந்தம் பணம் செலுத்தி வந்துள்ளார்.

இவ்வாறான நிலையில், குறித்த இளைஞன் தங்களது மகளிடம் கடந்த மார்ச் மாதம் வந்து தன்னால் தொடர்ந்து பணம் செலுத்த முடியாதுள்ளதாகவும் தன்னுடன் வந்து வாழுமாறும் வற்புறுத்தியுள்ளார் எனத் தன்னுடைய மகள் தனக்குத் தெரிவித்தாகவும் கூறினார்.

இந்த நிலையிலேயே தங்களுடைய மகள் காணாமல் போனதாகவும் தயார் தெரிவித்தார்.

குறித்த இளைஞன் இன்னும் ஊரிலேயே தங்கியிருக்கும் நிலையில், பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையின் பின்னர் குறித்த இளைஞனுக்கும் சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்தாகவும் தயார் குறிப்பிட்டார்.

## பல்கலை...

பொலிஸ்மா அதிபர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தக்குழுவினர் நேற்று முன்தினமே யாழ்.வைத்தியசாலைக்குச் சென்று தாக்குதலுக்குள்ளாகிய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளரின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் தாக்குதலில் ஈடுபட்ட வர்கள் குறித்து தகவல் தெரியாத காரணத்தினால் எவரையும் கைது செய்ய முடியவில்லை எனவும், தொடர்ந்து குழுவினர் விசாரணைகளில் ஈடுபட்டு, தாக்குதலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் குடாநாட்டில் பாரியளவில் குற்றச்செயல்கள் நடைபெறவில்லை. ஐந்து கொள் ளைச் சம்பவங்களே பெரிதாக இடம்பெற்றுள்ளது.

அத்தகைய குற்றச்செயல்களைத் தினம் தினம் பொலிஸார் புலனாய்வு செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் பொலிஸ் பிரிவுகளிலும், கிராமங்களிலும் கொள்ளை மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த இரவு நேர ரோந்து நடவடிக்கை யும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கடந்த வாரத்தில் (பிடியாணை) பிறப்பிக்கப்பட்ட 18 குற்றவாளிகளையும், இரவில் சுற்றித்திரியும் 11 பேரையும் கைது செய்திருப்பதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாரிய குற்றச் செயலில் ஈடுபட்ட 29 பேரைக் கைது செய்து விசாரணை நடத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார். (பா)

## வலுவிழந்த...

பெண்ணை அருகில் இருந்த பற்றை ஒன்றில் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்துள்ளனர்.

விடயமறிந்த ஊர் மக்கள் குறித்த இருவரையும் துரத்திப் பிடித்து பனை மரத்தில் கட்டி வைத்தனர்.

பின்னர் ஊர்வாற்றுறை பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதைத் அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இருவரையும் கைது செய்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

குறித்த பெண் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (50)

## பரிந்துரை...

அகற்ற கோருபவர்கள் சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு உதவுபவர்களின் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதை அவதானிக்கவில்லையா? அவற்றை தடுத்து நிறுத்த என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்தார்கள்.


இன்று எமது நாட்டில் எவ்ரும் எந்தவொரு குற்றச்செயல்களையும் செய்ய முடியாது. பாதாள உலகம், போதைப் பொருள் விற்பனைகளில் ஈடுபட்டு வந்தோரையும் நாம் இப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

கடந்த 30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தத்தில் பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த பல்வேறு தடைகள் தற்போது முற்றாக நீக்கப்பட்டு முழுண்மயான சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள போதிலும் சிலரின் மனங்களில் போடப்பட்டுள்ள பயங்கரவாதம் எனும் தடைகள் இன்னமும் நீங்கவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்ற நாடு என்ற வகையில் சர்வதேச நாடுகளுடன் எமக்கு சுமூகமான உறவு காணப்படுகின்றது.

அன்று யுத்தத்தை முற்றாக ஒழிக்க உதவிய நாடுகள், இன்று இலங்கையை அபிவிருத்தியின் வழியில் இட்டுச் செல்லவும் பாரியளவிலான ஒத்துழைப்புக் களை வழங்கி வருகின்றன. என்று ஜனாதிபதி மேலும் கூறினார்.

# பொன்சேகாவை தவறாக வழிநடத்தியது அமெரிக்கா



## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை தவறாக வழி நடத்தியத்தில் அமெரிக்கா சம்பந்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இதில் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் பெரும் பங்களிப்பைச் செய்தது எனவும் பொன்சேகா அமெரிக்கா சென்றபோது, மேலும் பல ஆலோசனைகள் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அதேவேளை சரத் பொன்சேகா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட பலர் உயிருடன் இருந்திருக்க மாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற இராணுவ வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பித்து வைத்து, உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். சரத் பொன்சேகாவைப் பார்த்து அமெரிக்க தூதரகம் புன்னகைத்தது. இதன் பாதூரமான விடயம் என்னவெனில், அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரே தன்னை ஜனாதிபதியாக நினைத்துக் கொண்டார். ஆரம்பத்தில் ரணில் விக்ரமசிங்கவை, பொன்சேகா சேர் என்றே அழைத்து வந்தார். பின்னர், அவரை ரணில் என அழைக்க ஆரம்பித்தார். பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவாகி இருந்தால் எப்படி அழைத்திருப்பாரோ தெரியவில்லை. சிலர் ரணிலின் ஜாதகம் சரியில்லை என கூறினாலும். அது அப்படியல்ல, பொன்சேகாவினால் ரணில் தப்பித்தார்.

சரத் பொன்சேகா, இராணுவத் தளபதி என்ற முறையில், விடுதலைப் புலிகளின் பயங்கரவாத்தை தோற்கடிப்பதில் விசேட பங்காற்றினார். இதற்கான கௌரவத்தை நாம் அவருக்கு தொடர்ந்தும் வழங்குவோம். எனினும் ஜனாதிபதியான முப்படைத் தளபதி ஆற்றிய பணிகளை விட அதிகமான பணிகளை செய்தார் எனக் கூற முடியாது. சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி போரை நிறுத்துமாறு கோரினால், எப்படி போர் செய்வது. ஜனாதிபதிக்கு வெளிநாடுகள் பாரிய அழுத்தங்களை கொடுத்தன. இதனை நாம் நன்கு அறிவோம். இந்த சர்வதேச அழுத்தங்களுக்கு அடிப்பணியாத காரணத்தினால், ஜனாதிபதியை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்கின்றனர். இலங்கையில் இதற்கு முன்னர் ஆட்சி செய்த தலைவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போன்று தீர்மானங்களை எடுக்கவில்லை. இதனால் சரத் பொன்சேக்காவை விட, அரச தலைவர் என்ற முறையில் தீர்மானங்களை எடுத்து, பயங்கர வாத்தைத் தோற்கடிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்தை வழங்கினார் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# இலங்கை தூதரகத்திற்கு பூட்டு சென்னையில் முப்பது பேர் கைது

(சென்னை)

சென்னையில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திற்கு பூட்டு போட்டு மூடுவதற்கு முயற்சி செய்த தமிழக அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்த 30பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போர் நடவடிக்கைகளின் போது உயிரிழந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று தமிழகத்தில் நேற்று இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள், திடீரென சென்னையிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் கூடி, அதன் பிரதான வாயிலை மூடி பூட்டு போட முயற்சித்துள்ளனர். இவர்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்த பொலிஸார், 30 பேரைக் கைது செய்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தமிழ் விடுதலை அமைப்பு, மனிதநேய மக்கள் கட்சி, பெரியார் தி.க., சேவ் தமிழ் அமைப்புக்களை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வவுனியா கைதிகளும் உண்ணாவிரதம்

(வவுனியா)

வவுனியா விளக்கமறியல் சிறையில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபர்கள் சிலர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல ஆண்டுகளாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் தாம் தொடர்ந்தும் விளக்கமறியல் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் என சுட்டிக் காட்டி தம்மை விடுதலை செய்யுமாறு கோரி இந்த உண்ணா விரதப் போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா சிறையில் விளக்கமறியல் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள 14 பேர் இந்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து மேலும் 30 கைதிகளும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறைக் கைதிகள் உண்ணா விரதம் ஆரம்பித்துள்ள நிலையில், சிறைச்சாலை பாதுகாப்பு கூட்டம் ஒன்று இன்றைய தினம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அரசுக்கான மக்கள் ஆதரவு வீழ்ச்சி என்கிறார் ஹக்கீம்

அரசாங்கத்துக்கு இருந்த மக்கள் ஆதரவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது பொது மக்களின் கருத்துக்கள் மூலம் தெரியவருவதாக முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

தம்புள்ளை பள்ளிவாசல் பிரசசினை தொடர்பாக அவசரப்பட்டு முடிவுகள் எதனையும் எடுக்க வேண்டாம் என தெரிவித்துள்ள ஜனாதிபதி அப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வொன்று வெகு விரைவில் பெற்றுக்கொடுப்பதாகவும் வாக்களித்துள்ளார் எனவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

அநுராதபுரம் சீ.ரீ.சீ.மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கட்சி பிரமுகர்களுடனான கலந்துரை யாடலில் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசாங்கத்துடன், இணைந்து செயற்படும் இரண்டாம் நிலை பெரிய கட்சி நாமே. எம்மை அரசாங்கத்திலிருந்து பிரித்து வேடிக்கை பார்க்க சிலர் முற்படுகின்றனர். எனினும் கண்டதற்கெல்லாம் காவடி ஆடும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல நாம்.

எம்முடனிருந்து பிரிந்து சென்ற சிலர் முஸ்லிம் காங்கிரஸை வீழ்த்த பல்வேறு சதிகளைச் செய்கின்றனர். சில பிரதேச எல்லைகளுக்கே போக முடியாத நிலை ஒரு காலத்தில் எமக்கு இருந்தது. இவ்வாறான பல சவால்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியிலேயே நாம் இந்த அளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக நாம் 50 இற்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் உருவாக்கியுள்ளோம்.



வடமத்திய மாகாண சபைத் தேர்தலுக்கு நாம் தயாராக வேண்டியுள்ளது. இதில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்புரிமையை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நாம் கலந்துரையாடல்களை நடத்தி உறுப்பினர்களையும் கட்சி கிளைகளையும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

# சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு கிடைத்தது நட்டஈடு

(யாழ்.நிருபர்)

காரைநகர் கடற்படைத்தள வீஸ்தரிப்பிற்காக அரசாங்கத்தால சுவீகரிக்கப்பட்ட காணிகளில் மேலும் ஒரு தொகுதியினருக்கு நட்டஈட்டுக்கான ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளதாக காரைநகர் பிரதேச செயலர் திருமதி தே.பாபு தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கீழ்க்குறிப் பிடப்படும் காணித்துண்டுகளுக் கான நட்ட ஈட்டுத்தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையோர் காரைநகர் பிரதேச செயலருடன் உடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நட்டஈட்டுக்குரிய காணித் துண்டு இலக்கங்கள் 10, 24, 36, 37, 43, 57, 61, 62, 66, 70, 96, 104, 115, 117, 128, 150. (10)


## பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில்

### பாரதியார் பல்கலைக்கழக ஊடக பட்டப்படிப்பு

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்று Certificate in Journalism, Diploma in Jouralism, B.Sc. (Visual Communication) P.G. Diploma (Communicative English) M.A. (Journalism & Mass Communication) ஆகிய கற்கைநெறிகளை யூன் 2012இல் ஆரம்பிக்கவுள்ளது. கல்வி கற்போர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் தொடர்புகொள்ளவும்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 6085, 021 7200898

(C/1566)


# வாகன விபத்தில் 3 பொலிஸார் பலி

பன்னல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில், பன்னல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளனர். குறித்த மூவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் நேற்று அதிகாலை நிறுத்திவைக்கப்பட்டிருந்த ட்ரக் வாகனத்தில் மோதியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சடலங்கள் சந்தலங்காவை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

# அரசியல் தீர்விற்கான பேச்சை ஆரம்பிக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்குபற்றுமானால், அரசியல் தீர்வுக்கான ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கமும், ஐக்கிய தேசியக் கட்சியும் கடந்த வாரம் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தைகளில் பேசப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உரிய நிகழ்ச்சி நிரலின் கீழ் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர், சிறிய திருத்தங்களுக்காக அந்த நிகழ்ச்சி நிரல் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அரசாங்கத்தின் பதில் கிடைத்த பின்னர், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதா இல்லையா என்பது குறித்த தமது நிலைப்பாடுகள் பற்றி ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்திற்கு அறிவிக்கவுள்ளன.

அதேவேளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஜே.வி.பியையும் கலந்துகொள்ள செய்வதற்காக மேற்படி நிகழ்ச்சி நிரல் தொடர்பில், அந்த கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்.

# தந்தையைப் பார்க்க வந்தனர் மகள்கள்



சரத் பொன்சேகாவின் மகள்களான அப்சரா, அபர்ணா ஆகியோர் நேற்று கொழும்பு நவலோக்க வைத்தியசாலைக்குச் சென்று சரத் பொன்சேகாவைப் பார்வையிட்டனர். இவர்களுடன் அனோமா பொன்சேகாவும் வந்திருந்தார். சிறைவைக்கப்பட்டுள்ள தந்தை விடுதலை செய்யப்படுவதாக செய்தி கிடைத்தவுடன் அமெரிக்காவிலிருந்து இலங்கை புறப்பட்டதாக பொன்சேகாவின் மகள்மார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மே 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.